பால வித்யா
தொகுதி 3 பகுதி 8
ஆகஸ்டு 1932

JL
ரு211, N3ogv
N32.3.8.
188795

1353 ...d. M. No. 2573.




SEP 19..

உ

# பால வித்யா

(மாதப் பத்திரிகை)

No. ——
9 SEP 1932

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு "


| தொகுதி III | 1932ஹு ஆகஸ்டு மீ<br>ஆங்கீரஸஹு ஆவணி மீ | பகுதி VIII |
|---|---|---|


## ஹாஸ்ய விநோதங்கள்.

——0——

(BY C. V. PICHAI).

வழிப்போக்கன்:—மிஸ்டர் ! இந்த ஆபீஸ் கடியாரம் மணி சரெக்டா யிருக்குமா ?

கிளார்க் :—ஓ ! அதிலென்ன சந்தேகம் ? மாடி கடிகாரமும் இதுவும் அநேகமாய் சரியாய்த்தானிருக்கும். ஆனால் ரயில்வே கடிகாரம் மாத்திரம் இதைவிட ஒருமணி பிந்தி போவதாய் கேள்வி.

* * * * * *

டைபிஸ்ட் :—மிஸ்டர் ! ஒருவிஷயம். நம்ம எஜமானர் வெகுநாளாய் நான் தாமஸமாய் வேலைசெய்வதாய் எண்ணியிருந்தார் அதனால் உண்டாகும் நன்மை அவருக்கு இப்பொழுதுதான் தெரிகிறது.

கிளார்க் :—அப்படி என்ன விசேஷம் நடந்தது?

டைபிஸ்ட் :—என் [illegible] ஆண்டவனுக்கு [illegible] தமனுப்பும் காலே எட்டும [illegible] தெரிவித்தார். நான் [illegible] தா

188795

மரம் மிஷினில் உட்காருவதற்கு மணி பதினொன்றாய்விட்டது. அதற்குள் இன்ஷியூரில் பணம் வந்துவிட்டது தபால் செலவு மிச்சம்தானே?

* * * * *

**பிராமணர்:**—என்னடா செட்டியார்வாள்! இன்னைய்தினம் நம் பட்டணம் வெங்கட்டராமபாகவதர் 'சீதா ஜனனம்' கதா காலக்ஷேபம் செய்கிறார். அடுத்த வாரம் 'சீதா கல்யாணம்'. கதை ரொம்ப நன்றாயிருக்காம்.

**செட்டியார்:**—நல்லவேளை! இப்பொழுது கலியாணமில்லை. சீதைக்கு பிறந்து ஒருவாரத்திற்குள்ளா கல்யாணம்? அடே அப்பா! காருண்ய கவர்ன்மெண்டாரோ அல்லது புத்திசாலிகளான சு. ம. சங்கத்தார்களோ அறிந்தால் விவாஹ மசோதா சட்டப்படி நம்மையும் கோர்ட்டுக்கு இழுப்பார்கள். வேணுமானால் நீர் போம் வெளியில் மாத்திரம் சொல்லாதேயும்.

* * * *

**சுப்பு:**—என்ன பாகவதர்வாளைப் பார்க்கமுடியுமோ? மைலாப்பூர் சான்ஸ் ஜாஸ்தி. வரும்படி ரொம்பவோ? சரிதான்—

**பாகவதர்:**—ஆமாம்; இனம் கதைகள் ஜாஸ்தி. ஆனால் இரண்டு மூன்று கோவில் கதைகளில் வீபூதி பிரஸாதத்துடன் தேங்காமூடியும் வைத்துக்கொடுத்தார். மற்ற தாக்ஷண்ய இடங்களைப் பற்றி நான் சொல்லவேண்டாம். நீயே தெரிந்துகொள்ளலாம்.

* * * * *

**கடன் கொடுத்தவன்:**—(கடன்கார செட்டியாரைப் பார்த்து) என்ன செட்டியார்வாள்! இந்த காலத்தில் கொடுத்த பணத்தைக் கேட்டால் எல்லாருக்கும் கோபம் வருகிறது. என்ன செய்யலாம்?

**செட்டியார்:**—ஆமாங்க; காலம் அப்படி இருக்குது. கடக்கு போங்க. உங்கள் [illegible] வந்துசேரும்.

* * *



சந்திக்கும்படியாய் அவர்களை ஏற்பாடு செய்ததாகப் பிறகு தெரிந்துகொண்டேன். ஆகையால் பேசச் சக்தியற்றவளானேன். மேலும் நீங்களும் திடீரென்று எங்கோ சென்றுவிட்டீர்கள். அவ்வீட்டில் கொலையுண்டது தாங்கள்தானென்று பாலகிருஷ்ணன் சொன்னான். இப்பொழுது உண்மையைத் தெரிந்துகொண்டேன். மேலும் என் காதலன் திருவேங்கடத்தை ஏன் கொல்லப்பார்த்தார்கள்?

**பத்மநா:**—ஒரு நாள் தியாகராஜன் உங்கள் புஸ்தக சாலையில் புஸ்தகங்களை ஒழுங்காக வைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பழைய பீரோவில் சில அருமையான கைப்பிரதிகளைக் கண்டு அவைகளைப் பரிசோதித்துக்கொண்டிருக்கையில் அப்பிரதிகளில் ஒன்றின் மத்தியில் இப்பொழுது வழங்கும் காகிதத்தில் ஓர் வாக்குமூலம் எழுதப்பட்டு வைத்திருக்கக் கண்டு அதைப் பிறர் அறியாமல் தன் அறைக்குக் கொண்டு போய்ப் பார்க்க, அது உன் பாட்டனால் எழுதப்பட்டு தக்க சாக்ஷிகளும் வாங்கப்பட்டிருந்த வாக்குமூலப் பத்திரமாய் இருக்கக் கண்டான். ஆகையால் அதை வைத்துக்கொண்டு ஏராளமான பணம் சம்பாதிக்கலாமென்று எண்ணிவிட்டான்.

**காமாக்ஷி:**—அது என்ன வாக்குமூலம்?

**பத்மநா:**—உன் தகப்பனார் கல்யாணசுந்தரம் பிரபு உன் பாட்டனாரின் புதல்வரல்ல என்பதுதான் அதன் கருத்து.

**காமாக்ஷி:**—அவர் குமாரர் அல்லவா? (என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.)

**பத்மநா:**—உன் பாட்டனாரும் பாட்டியாரும் காசி யாத்திரை சென்றிருந்தபொழுது உன் தகப்பனார் ஒன்பது மாதக் குழந்தை. அவர்கள் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றார்கள். அங்கு சேர்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம் குழந்தை மாந்தத்தினால் இறந்துவிட்

டது. அத் துக்கம் தாங்கமாட்டாமல் உன் பாட்டியாரின் வேண்டுகோளின்படி அவனிடம் வேலையாயிருந்த இந்தப்பக்கத்து மனுஷனுக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்து அவனது ஒன்பது மாதக் குழந்தையை வாங்கித் தம் பிள்ளையைப்போல் பிறர் நம்பும்படி வளர்த்துவந்தார்கள். இவ்வுண்மை அவ்விருவருக்குமட்டுந்தான் தெரியும். உன் பாட்டனார் சாகும் தருணத்தில் தன் மனம் சமாதானம் அடையும்பொருட்டு தன் லாயரைக்கொண்டு ஓர் வாக்குமூலம் எழுதிவைத்து சாக்ஷிகளும் வாங்கினார். இது கோர்ட்டுக்குப் போகும்பக்ஷத்தில் நீங்கள் எல்லாவற்றையும் இழந்து பரம ஏழையாகிவிடுவீர்கள். மேலும் இச் சொத்து முழுவதும் இதற்குச் சொந்தக்காரன் அடைவான்.

காமாக்ஷி:—அவன் யார்?

பத்மநா:—அவன்தான் வீரபத்திரன்.

காமாக்ஷி:—அப்படியானால் நியாயஸ்தலத்திற்குச் சென்று தங்கள் வேலையைச் செய்துகொள்ளலாமே. என்னை ஏன் கொல்லப்பார்க்கவேண்டும்?

பத்மநா:—இதைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை நான் மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அது அவர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. நான் உன்னிடம் அந்தரங்கமாயுள்ளவனானதால் ஒருக்கால் உன்னிடம் சொல்லியிருப்பேன் என்று எண்ணியே உன்னைக் கொல்லப்பார்த்தார்கள். நீ திருவேங்கடத்தைக் காதலித்திருப்பதினால் நீ அவ் விஷயத்தை அவனிடம் சொல்லியிருக்கலாமென்றும், மேலும் அவன் பாலகிருஷ்ணன் விஷயத்தில் தலையிட்டுக்கொண்டதினாலும் அவனைக் கொல்லப்பார்த்தார்கள். அப் பத்திரம் இதோ இருக்கின்றது. பாலகிருஷ்ணன் பத்திரங்களுடன் இதையும் கண்டெடுத்தேன். இதோ இதை அழித்துவிடுகிறேன். (என்று சொல்லி அப் பத்திரத்தை விளக்கில் கொளுத்தி சாம்பலாக்கினான்.)



காமாக்ஷி: இதுதானா இதன் முடிவு?

பத்மநா:—ஆம்; இனி உன் தகப்பனாரின் நல்நிலைமையாவது அல்லது அவர் பட்டத்தையாவது [illegible]னும் அடையமுடியாது. நீதான அவைகளுக்கு உரியவள். மேலும் அப் பத்திரத்தைப்பற்றிய தகவல்களை என் மனதிற்குப் பட்டவரையிலும் சொல்லுகிறேன். உன் குடும்பத்திற்கும் வீரபத்திரன் குடும்பத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதென்றும் அவன் விழுப்புரத்தின் சமீபத்திலுள்ள ஓர் கிராமத்தில் ஏழைக் குடியான வம்சத்தைச் சேர்ந்தவனென்றும் நேற்று காலையில் தெரிந்துகொண்டேன். ஆகையால் இப் பத்திரம் போர்ஜரி என்றே நன்றாய்த் தெரிகிறது. மேலும் தியாகராஜன் அதைக் கண்டெடுத்ததாகச் சொன்னது வெறும் கட்டுக் கதையென்றும் அதில் வீரபத்திரன் பெயர் காணப்படுவதால் அவர்கள் இவ்வேற்பாட்டை முன்னதாகவே செய்துவைத்[illegible]தென்றும் நன்றாய்த் தெரியவருகிறது. தவிர உன் பாட்டனார் கையெழுத்தையும் இதிலுள்ள கையெழுத்தையும் ஒத்திட்டுப் பார்த்தேன். அவைகளில் வித்தியாசமே கிடையாது. அவர்கள் பெயர்பெற்ற கள்ளக் கையெழுத்துப் போடுகிறவர்களாகையால் அவர்கள் வேலையைச் சரிவரவே நடத்தியிருக்கிறார்கள். மேலும் நான் உன்னை அவர்களுக்கு அறிமுகமாக்கும் முன்னமேயே இதைச் செய்திருக்கிறார்கள். ஆகையால் நம்மிருவரையும் ஒன்றுசேர்த்து தங்கள் கைக்குள் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார்கள். இதுதான் இப் பத்திரத்தைப்பற்றிய எனது அபிப்பிராயம்.

காமாக்ஷி:—நீங்கள் எங்களை இவ்வாபத்தினின்றும் காப்பாற்றியதற்கு நாங்கள் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? சர்வசாக்ஷியாய் விளங்கும் அப் பரமாத்மாதான் உங்களை ரக்ஷிக்கவேண்டும்.

பத்மநா:—இன்னும் ஒன்று சொல்லுகிறேன்' உன் பிரேதமகப்படும்பக்ஷத்தில் நீ உன் மானத்தைக் காப்பாற்

றிக்கொள்ளும்பொருட்டு நீ தற்கொலை செய்துகொண்டதாய் நிரூபிக்க உன்னிடம் ஓர் மனிதனால் உனக்கு எழுதியமாதிரியாக ஓர் கடிதம் கண்டுபிடிக்கவேண்டுமென்று அம்மாதிரியாக ஓர் கடிதம் தயார்செய்து வைத்திருக்கிறார்கள். அதுவும் இதோ இருக்கின்றது. அதையும் இதோ அழித்துவிடுகிறேன். (என்று சொல்லி அதையும் விளக்கில் கொளுத்திச் சாம்பலாக்கினான்.)

## அத்தியாயம் 31.

காமாக்ஷி "இந்த விஷயங்களை நீங்கள்தான் என் தகப்பனாரிடம் நேரில் சொல்லவேண்டும். அவருக்கு இந்த விஷயங்கள் ஒன்றும் தெரியாது. அவர் என் வரவை எதிர்பார்த்துக்கொண்டு புஸ்தகசாலையில் காத்துக்கொண்டிருப்பார். வாருங்கள் போகலாம்." என்று சொல்லி பத்மநாபனை அழைத்துக்கொண்டு புஸ்தகசாலையில் நுழைந்தாள். காலடி ஓசையால் வருவது காமாக்ஷி என்பதைத் தெரிந்துகொண்ட பிரபு "வா, காமாக்ஷி! உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். தியாகராஜனை இவ்விரண்டு நாட்களாய்க் காணோம். எங்கு சென்றானோ தெரியவில்லை. உன்னுடன் யாரோ வந்திருப்பதாகத் தோன்றுகிறது. நீ அழைத்துக்கொண்டுவந்திருப்பதால் அவர் வரவு நல்வரவாகுக." என்று சந்தோஷமாகச் சொன்னார். காமாக்ஷி பத்மநாபனைத் தன் தகப்பனாருக்கு அறிமுகம் செய்துவைத்தாள். உடனே பிரபு பத்மநாபனை ஓர் நாற்காலியில் உட்காரும்படியாக உபசரித்து "தாங்கள் யாரோ தெரியவில்லை? தங்களை நேரில் கண்ணால் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. வந்த காரியம் என்னவோ?" என்று கேட்டார்.

"என் பெயர் பத்மநாபன். என் தகப்பனாரின் பெயர் மோகூர் ஸ்ரீநிவாஸம் பிரபு. நான் அயல்நாட்டில் வசிப்பவன். ஆனால் இச் சென்னைக்கு அடிக்கடி அலுவலாக



வருவதுண்டு. தங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நேரில் பார்த்தது கிடையாது. இப்பொழுது அப்பாக்கியத்தைப் பெற்றேன்." என்று சொல்லும்பொழுது பிரபு அவனைத் தடுத்து "எந்த ஸ்ரீநிவாஸன்? மோகூர் ஸ்ரீநிவாஸனா? அவன் என் அத்தையின் புதல்வனல்லவா? அவனைப் பார்த்து சுமார் பதினைந்து வருஷமிருக்கலாம். எங்கள் குடும்பத்திற்கும் உனது குடும்பத்திற்கும் என் அத்தையின் மரணத்திற்குப் பிறகு போக்குவரத்து இல்லாமல்போய்விட்டது. உன்னுடைய பாட்டனார் ரங்கூன் சென்று அவ்விடத்திலேயே வசிக்க ஆரம்பித்தார். அவ்விடம் சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்து மிகவும் பணக்காரராகிவிட்டார். அவருக்கு இரண்டு புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். மூத்தவன் பெயர் ஸ்ரீநிவாஸன். இளையவன் பெயர் ராமநாதன். பெண் குழந்தையின் பெயர் பார்வதி. அவர் காலத்திற்குப் பிறகு அச் சகோதரர்கள் தங்கள் தகப்பனாரின் சொத்தை பாகித்துக்கொண்டார்கள். பார்வதியைச் சிறியவன் அழைத்துக்கொண்டு திருச்சினாப்பள்ளிக்கு வந்து அங்கேயே தனக்குக் கிடைத்த சொத்தை வைத்துக்கொண்டு ஜீவிக்கலானான். அவ்விடத்தில் ஓர் பெண்ணை மணந்து ஓர் புத்திரனைப் பெற்றான். குழந்தை பிறந்ததும் தாயார் பரலோகமடைந்தாள். அவன் புனர்விவாஹம் செய்துகொள்ளாமல் தன் குழந்தையைத் தாதி மூலமாய் வளர்த்துவந்தான். குழந்தை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து பி. ஏ. பரீக்ஷையில் தேறினான். அப்பொழுது அவன் தகப்பனார் சிவலோகப்பிராப்தியடைந்துவிட்டார். அதன்பிறகு அக் குழந்தையின் சமாசாரம் எனக்குத் தெரியாது. இது நடந்து சுமார் பத்து வருஷம் இருக்கலாம். ரங்கூனில் ஸ்ரீநிவாஸன் ஓர் ஆண் மகவைப் பெற்று குழந்தையும் படித்து நல்ல ஸ்திதியில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் உன்னை நேரில் காணாவிடினும் விஷயங்களை மட்டும் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறேன். உன் தகப்பனார் காலகதியடைந்ததைக் கேட்க மிகவும் துக்கமடைந்தேன். நான் கண்

ணில்லாப் பாபியாகையால் அந்த சமயம் உன்னைப் பார்க்க முடியவில்லை. உனக்கு இந்த விபரங்கள் தெரிந்திராதென்றே நினைக்கிறேன். இப்பொழுது தெரிந்துகொண்டாயல்லவா? இனி நீ இச் சென்னையிலுள்ளவரையில் இம் மாளிகை உன்னுடையதே. நீ இங்கேயே சுகமாக வசிக்கலாம். நீ இப்பொழுது இச் சென்னைக்கு வந்த காரணத்தைச் சொல்லும்படியாகயிருந்தால் சொல்லலாம்." என்றார்.

பத்மநாபன் "எனக்கு இச் சம்பந்தம் தெரியாது. மேலும் என் தகப்பனாரும் என்னிடம் சொன்னதில்லை. இப்பொழுது தாங்கள் சொன்னதைக் கேட்க மிகவும் சந்தோஷமடைந்தேன். காமாக்ஷியை எனக்கு இரண்டு வருஷங்களாகத் தெரியும். இம் மாளிகைக்குமட்டும் நான் வந்ததில்லை. என் சிறிய தகப்பனாரின் குமாரன் இவ்வூரிலேயேதான் இருக்கிறான். அவன் என் ஸகோதரனென்பதை இன்று காலையில்தான் தெரிந்துகொண்டேன். அவன் திருச்சினாப்பள்ளியில் பி. ஏ. பரிக்ஷையில் தேறி இச் சென்னைக்கு வந்து இஞ்சினியரிங் காலேஜில் வாசித்து பரிக்ஷையில் முதன்மையில் தேறி இப்பொழுது சாம்ஸன் கம்பெனியில் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்திலிருக்கிறான். அவன் பெயர் திருவேங்கடம். அவனும் காமாக்ஷியும் ஒருவரையொருவர் காதலித்துவருகிறார்கள். அக் காதலின் பயனுக்குத்தான் அவனுக்குத் தமது கோபத்தில் அபாயம் ஏற்பட்டது. இப்பொழுது அவன் சுகமடைந்துவருகிறான். அவனைப்பற்றி இனி பயப்படத் தேவையில்லை." என்று சொல்லி தியாகராஜன் செய்துள்ள சூழ்ச்சிகளையும் அவனது முடிவையும் விபரமாய்க் கூறி அப் பத்திரத்தின் விஷயத்தையும் சொன்னான்.

பிரபு "இது சுத்த அபாண்டமான பொய்க் கதை. அத் துரோகி தியாகராஜனை யோக்கியன் என்று எண்ணி வேலையில் வைத்துக்கொண்டேன். உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் பாதகனென்று எண்ணாமல் அவனை நம்பி மோசம்போனேன். அப் பத்திரத்தில் எழுதியிருப்பதாக நீ சொன்னவைகள் முழுப் பொய். என் தகப்பனார் காசி



க்கு" சென்றதே கிடையாது. இது வேண்டுமென்றே ஏற்படுத்திய மோசடி. நான் குழந்தையாயிருந்தபொழுது என் தகப்பனார் என்னை வருஷாவருஷம் போட்டோ எடுத்துவைத்திருக்கிறார். அவைகளின் கீழ் என் தகப்பனாரின் கையெழுத்தும் படம் பிடித்த தேதியும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் போட்டோ ஆல்பத்திலிருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் இவைகள் சுத்தப் பொய்யென்பது நன்றாய் விளங்கும். காமாக்ஷிக்கு இது தெரியாது. அவள் சிறு குழந்தையாகையால் அவளிடம் இதை நான் சொல்லவில்லை. மேலும் சொல்லும்படியான சந்தர்ப்பமும் ஏற்படவில்லை. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் காமாக்ஷியின் காதல் நம் குடும்பத்தில் சேர்ந்தவன்மீது விழுந்தது தெய்வ சங்கல்பந்தான். காமாக்ஷி! என் விஷயத்தில் கொஞ்சம்கூட சந்தேகப்படவேண்டாம். நீ அப் போட்டோ ஆல்பத்தை உன் அத்தானிடம் கொடு." என்றார்.

காமாக்ஷியும் அவ்விதமே செய்ய பத்மநாபன் அதைப் பார்த்துப் பிரபு சொன்னது வாஸ்தவமென்று கண்டுகொண்டு "காமாக்ஷி! இனி இவ் விஷயமாய் உனக்குக் கவலை வேண்டாம். திருவேங்கடத்தைப் பார்க்க இன்று காலையில் சென்றிருந்தேன். அவன் மேஜையின்மேல் ஒரு போட்டோ படமிருந்தது. அதில் 'ராமநாதன், மோகூர்' என்று எழுதியிருந்தது. அதைக் கண்டு நான் ஆச்சரியமுற்று அது யாருடைய படமென்று கேட்டேன். அது தன் தகப்பனாருடையதென்று சொன்னான். உடனே நான் என் விருத்தாந்தத்தைச் சொன்னேன். அதைக் கேட்டதும் அவனுக்குண்டாகிய ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. நாங்கள் சகோதரர்களென்று தெரிந்துகொண்டதும் எங்கள் விருத்தாந்தங்களை ஒருவருக்கொருவர் கேட்டுத் தெரிந்துகொண்டோம். நீ எங்களுக்கு அம்மங்காளென்பது அப்பொழுது தெரியாது. நாம் போய் அவனுக்குச் சொல்லி அவனை இங்கு அழைத்துவருவோம். பிரபுவும் இவ் விஷயத்தில சம்மதிப்பாரென்று நினைக்கிறேன்." என்றான்.

பிரபு "பத்மநாபா! உன் இஷ்டத்திற்கு விரோதமாக நடப்பேனோ? என் குழந்தையின் க்ஷேமத்தின்பொருட்டு நீ செய்திருக்கும் ஒத்தாசைக்கு இவ்வுயிரையே கொடுக்க சித்தமாயிருக்கிறேனே. திருவேங்கடத்தைத் தனிமையாக விட்டுவைக்க எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் என் மோட்டாரைக் கொண்டுபோய் அவனை நீயும் காமாக்ஷியும் உடனே அழைத்துவரவேண்டும். மணியும் ஆறு ஆகிறது. சாப்பாட்டிற்கு உங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். நீங்கள் போய்வருவதற்குள் அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தயாராய் வைக்கும்படி விஜயாளுக்குச் சொல்லுங்கள். சீக்கிரம் வரவேண்டும்." என்றார்.

உடனே இருவரும் மோட்டாரில் ஏறிக்கொண்டு திருவேங்கடத்தின் ஜாகைக்குச் சென்றார்கள். மணியும் சுமார் 6½ ஆயிற்று. அச்சமயம் திருவேங்கடம் மருந்து சாப்பிட்டுவிட்டு காதரின் உதவியால் மெத்தைமீது உலாவிக்கொண்டிருந்தான். மோட்டார் வாசலில் வந்து நிற்பதைக் கண்ட காதர் கீழே சென்று கதவைத் திறக்க காமாக்ஷியும் பத்மநாபனும் உள்ளே சென்று திருவேங்கடத்தைக் கண்டார்கள். திருவேங்கடம் உடம்பு அசக்தத்தினால் ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் சந்தோஷத்தோடு வரவேற்றான். பத்மநாபன் திருவேங்கடத்தைப் பார்த்து "திருவேங்கடம்! நான் யாரை அழைத்துவந்திருக்கிறேன்? சற்று சொல் பார்ப்போம்." என்றான்.

திருவே:—காமாக்ஷிப் பெருமாட்டியை அழைத்துவந்திருக்கிறாய். இதில் என்ன விசேஷம்? நான் சுய புத்தியோடுதான் இருக்கிறேன்.

பத்மநா:—இவள் உனக்கு என்ன உறவாகவேண்டும்?

திருவே:—இது என்ன கேள்வி? அவள் இப்பொழுது என் காதலி. இன்னும் சில நாட்களில் என் மனைவியாகப் போகிறாள்.

பத்மநா:—சரி; உறவு தெரியாதே? இப்பொழுதுதான் மாளிகைக்குச் சென்றிருந்தேன். பிரபுவால் நாம் அவர்



அத்தையின் பேரப்பிள்ளைகளென்றும் இவள் நமக்கு அம்மங்காளென்றும் தெரிந்துகொண்டேன். (என்று சொல்லி நடந்த விஷயங்களை அவனுக்குச் சுருக்கமாய்ச் சொன்னான்.)

இதைக் கேட்ட திருவேங்கடம் ஆச்சரியப்பட்டு "இது விஷயம் எனக்கு இத்தனை நாட்களாய்த் தெரியாதே. நானும் சுமார் எட்டு வருஷகாலமாய் இச் சென்னையில் வசிக்கிறேனே. என் தகப்பனாரும் இது விஷயத்தை என்னிடம் சொல்லவில்லையே. ஆனால் தனக்கோர் சகோதரி இருந்ததாயும் அவளை காஞ்சீபுரத்தில் ஓர் சீமானான சோமசுந்தரம் என்பவருக்குக் கல்யாணம் செய்துகொடுத்ததாகவும் சொன்னார். அது இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. நீ இவ் விஷயத்தில் ஊக்கங்கொண்டிருப்பதால் நம் அத்தையையும்பற்றி விஜாரிக்கவேண்டும்." என்றான்.

பத்மநா:—இது விஷயத்தைப்பற்றி பிரபுவை வைத்துக்கொண்டு பேசலாம். நாழிகையாகிவிட்டது. பிரபு பசியுடன் நமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார். உன்னை அழைத்துக்கொண்டுபோகவே காமாக்ஷியும் நானும் பிரபுவின் உத்திரவைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறோம். காதர் வீட்டைப் பார்த்துக்கொள்வான். வண்டி தயாராக இருக்கிறது. மறுத்துச் சொல்லாமல் உடனே புறப்படு.

காமாக்ஷியும் திருவேங்கடத்தை வேண்டிக்கொள்ள காதரிடம் வீட்டை ஒப்புவித்துவிட்டு உடனே புறப்பட்டு அம் மூவரும் 8½ மணிக்கு மாளிகைக்கு வந்துசேர்ந்தார்கள். பிரபு திருவேங்கடத்திற்கு நல்வரவு கூறி அவனது தேக ஆரோக்கியத்தை விஜாரித்து உடனே போஜனசாலை சென்று சாப்பிட்டுவிட்டு கூடத்திற்கு வந்துசேர்ந்தார்கள்.

அப்பொழுது பத்மநாபன் பிரபுவைப் பார்த்து "பிரபோ! நான் மற்றொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேன். என் அத்தை பார்வதியம்மாளை காஞ்சீபுரத்தில் கல்யாணம் செய்துகொடுத்தார்கள். அவளு

க்கு ஓர் புத்திரன் பிறந்தான். அவன் சிறுவயதாயிருக்கும் பொழுதே அவன் தகப்பனார் பரலோகமடைந்துவிட்டார். பிறகு அவனை அடக்கியாள புருஷ ஸகாயமில்லாததினால் சேர்மான தோஷத்தால் கெட்டவழியில் நடக்க ஆரம்பித்துவிட்டான். அவனை நல்வழிக்குக் கொண்டுவர அவன் தாய் எவ்வளவு முயன்றும் பயன்படவில்லை. அந்த வியாகூலத்தினால் அவளும் பரலோகம் சென்றாள். அப்பொழுது அப் பையன் மெட்ரிகுலேஷன் கிளாஸில் வாசித்துக்கொண்டிருந்தான். பிறகு அவன் பட்டணம் சென்று அங்கு தன் இஷ்டப்பிரகாரம் நடக்க ஆரம்பித்துவிட்டான். அனேக சங்கங்களில் சேர்ந்து மெம்பரானான் அப்பொழுதுதான் திருவேங்கடத்திற்கு நண்பனானான். கடைசியாக அவன் ஓர் பெண்மேல் காதல்கொண்டு அவள் வலையில் சிக்கி அவள் ஆட்டிவைத்தபடி நடக்க ஆரம்பித்தான். அவள் அவனை உண்மையாக் காதலித்துவந்தபோதிலும் ஒரு காரணத்தால் அரங்கநாதன் கையில் சிக்குண்டு துர்போதனையால் அவனது சொத்துக்களை ரொக்கமாக்கி அதை கல்கத்தா பாங்கியில் கட்டும்படியாக ஏற்பாடு செய்தாள். பிறகு அவனை துர்விஷயங்களில் மாட்டிவிட்டு அதிகக் கடன்காரனாகும்படி செய்துவிட்டாள். ஆனால் அவள் இதுகளை வேண்டுமென்று செய்யவில்லை. அவள்தான் பத்மாக்ஷி. அப் பெண்ணும் அரங்கநாதன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள எங்களுடன் சேர்ந்துகொண்டாள். இது விஷயங்கள் பாலகிருஷ்ணனுக்குத் தெரியாது. இன்றிரவு சொல்லப்போகிறேன்." என்று சொன்னான்.

பிரபு:—பத்மாக்ஷியா? யார் அவள்?

பத்மநா:—அவள் நமது குலத்தைச் சேர்ந்தவளே. இச் சென்னையில் பரம்பரையாக பிரபுவாகவிருந்த குடும்பத்தில் பிறந்தவள். அவள் பாட்டனார் தன் சொத்துக்களை துர்வினியோகப்படுத்தி மிகவும் ஏழ்மையான ஸ்திதிக்கு வந்துவிட்டார். அவளும் அவள் தகப்பனாரும் வறுமையால் கஷ்டப்பட நான் அவர்களுக்குப் பொருளுதவி செய்திருக்கிறேன். ஆகையால் பத்மாக்ஷிக்கு என்னை நன்றாய்த் தெரியும். அவள் தகப்பன் இறந்ததும் அவளை தண்டபாணி என்னும் சீமான் காதலித்து அவளைக் கல்யாணம் செய்துகொள்ள நாளும் வைத்துத் தனது ஆஸ்தி முழுமையும் அவள் பெயருக்கு எழுதிவைத்தான். இது விஷயத்தை அவள் ஸகோதரனால் கேழ்வைப்பட்ட அரங்கநாதன் அன்றிரவே தண்டபாணியை பிறர் சந்தேகிக்காவண்ணம் விஷம்வைத்துக் கொன்றுவிட்டான். இப்போது பத்மாக்ஷி நல்ல ஸ்திதியிலிருக்கிறாள். நாழிகையாகிவிட்டது. பாலகிருஷ்ணனைப் பார்த்து சமாசாரங்களைச் சொல்லவேண்டும். நான் வருவதாய்ச் சொல்லியிருக்கிறேன். அவனும் காத்துக்கொண்டிருப்பான். போய்வருகிறேன்.



பிரபு:—அப்படியே செய். நாளைக் காலையில் பாலகிருஷ்ணன் பத்மாக்ஷி இவர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும். உங்களுக்காகச் சிற்றுண்டியருந்தாமல் நான் காத்துக்கொண்டிருப்பேன்.

பத்மநாபன் "அப்படியே செய்கிறேன்." என்று சொல்லி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சுந்தரவிலாஸம் வந்துசேர்ந்தான். பாலகிருஷ்ணனும் பத்மாக்ஷியும் அவனை வரவேற்று உபசாரம் செய்தார்கள். பின்பு ஆசனங்களில் அமர்ந்துகொண்டு பத்மநாபன் பாலகிருஷ்ணனைப் பார்த்து "பாலு! நான் சமீபத்தில் தெரிந்துகொண்ட சில விஷயங்களை உங்களிடம் தெரியப்படுத்தவேண்டும். முதலில் நீ இனி போலீசுக்குப் பயப்படவேண்டியதேயில்லை. நீ எழுதிக்கொடுத்திருக்கிற கடன் பத்திரங்களும் ஒப்பந்தச் சீட்டும் லாயரிடம் நீ கொடுத்த வாக்குமூலங்களும் இதோ இருக்கின்றன. இவைகளை அரங்கநாதன் வீட்டில் கண்டெடுத்தேன். மேலும் நீ கல்கத்தா பாங்கியில் கட்டியிருக்கும் ரூபாய்கள் வட்டியும் முதலுமாக மூன்று லக்ஷ ரூபாய்களாகயிருக்கின்றன. அந்த பாங்கியும் நல்ல நிலைமையிலிருக்கிறது. நாளையதினமே நீ அப் பணத்தை இச் சென்னையில் நல்ல நாணயமுள்ள பாங்கிக்கு மாற்றும்

படி கல்கத்தாவிற்குத் தந்தி கொடு. உன்னைப்பற்றிய விவரங்கள் நாளைய தினசரிப் பத்திரிகையில் வெளியிடும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அதைப்பற்றி இனி நீ கவலைப்படவேண்டாம். மேலும் உன்னைப்பற்றி இன்று காலையில் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டேன். உன் தாயார் பார்வதியம்மாள் என் தகப்பனாருடன் கூடப்பிறந்தவள். நீ எனக்கு அத்தைமகனாக வேண்டும். இரத்த சம்பந்தமிருப்பதால் நாமிருவரும் ஏறக்குறைய ஒரே ரூபமுள்ளவர்களாக இருக்கிறோம். நம் திருவேங்கடம் என் சிறிய தகப்பனாரின் புதல்வன். காமாக்ஷியின் தகப்பனாரின் அத்தை நம் தகப்பனாரைப் பெற்ற பாட்டியார். இவ்விஷயத்தை இப்பொழுதுதான் பிரபுவிடமிருந்து தெரிந்துகொண்டேன். இப் பத்மாக்ஷியும் நம் வகுப்பைச் சேர்ந்தவளே. மிகவும் கண்ணியம் வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவள். இவளை எனக்கு நன்றாய்த் தெரியும். இவள் தகப்பனாரையும் தெரியும். இனி உனக்குக் கவலை வேண்டாம். உன்னையும் பத்மாக்ஷியையும் மாளிகைக்கு நாளைக் காலையில் அழைத்துவரும்படி பிரபுவும் காமாக்ஷியும் ரொம்பவும் சொன்னார்கள். ஆகையால் நாளைக் காலையில் எல்லோரும் அங்கே போகவேண்டும். நேற்றைய தினம் அரங்கநாதன் தியாகராஜன் இவர்களின் பிரேதங்கள் போலீசாரால் பரிசோதிக்கப்பட்டன. அவர்களுடைய பூர்வ சரித்திரங்கள் முழுவதும் வெளியாயின. அவர்களுக்குச் சுற்றத்தார் ஒருவரும் இல்லாதபடியால் போலீஸ்காரர்களே அப் பிரேதங்களை அடக்கம் செய்துவிட்டார்கள். வீரபத்திரன்மேல் வாரண்டு கிளம்பியிருக்கிறது. அவனும் கூடிய சீக்கிரத்தில் கைதுசெய்யப்பட்டுத் தண்டனையடைவான். திருவேங்கடம் இப்பொழுது மாளிகையில் இருக்கிறான். காமாக்ஷி அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துவைப்பாள். நாழிகையாகிவிட்டது. நாளை மற்ற விஷயங்களை மாளிகையில் பேசிக்கொள்ளலாம்.'' என்றான்.

அவ்விதமே மறுநாட் காலையில் பாலகிருஷ்ணனையும் பத்மாக்ஷியையும் அழைத்துக்கொண்டு மாளிகைக்குச் சென்



றான். இவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டு காமாக்ஷியும் திருவேங்கடமும் வாசல்பக்கமுள்ள தோட்டத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு எல்லோரும் பிரபுவிடம் செல்ல அவர் இவர்களை வரவேற்று "நான் உங்களை எல்லோரையும் கண்ணால் கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை. இதுவரையில் எனக்கு ஒரே பெண் குழந்தைதான் இருந்தது. இன்றைய தினம் மூன்று ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் எனக்கு அருளிய பகவானை நாம் மனதாரத் துதிக்கவேண்டும். நீங்கள் இம்மாளிகையிலேயே இருந்து சௌகரியமாய் வாழவேண்டுமென்று எனது கருத்து. வாருங்கள்; சிற்றுண்டியருந்தலாம். அம்மா காமாக்ஷி! எல்லோரையும் அழைத்துக்கொண்டுவா. போஜன அறைக்குச் செல்வோம்." என்றார். எல்லோரும் சிற்றுண்டியருந்தியபின் அரங்கநாதன் செய்த சூழ்ச்சிகளையும் அதிலிருந்து தப்பிக்கொண்டு அவனை எதிர்த்ததையும் அவனும் தியாகராஜனும் தற்கொலைபுரிந்துகொண்டதையும் ஆதியோடந்தமாக விஸ்தாரமாக பிரபுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரபு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு "நீங்கள் தப்பியது தெய்வச் செயலே தவிர மனுஷ்ய யத்தனமல்ல. திருவேங்கடம்! நான் வைத்தினாதனைப் பார்க்கவேண்டும். உடனே அவனை இங்கு வரும்படியாகச் சொல்லியனுப்பு." என்றார். காமாக்ஷியும் திருவேங்கடத்தைப் பார்த்து "மீனாக்ஷியம்மாளையும் கூட அழைத்துவரும்படியாகச் சொல்லும்." என்றாள்.

அவ்விதமே திருவேங்கடம் டெலிபோனில் சொல்ல, ஆபீஸ் போகத் தயாராகவிருந்த வைத்தினாதன் தன் தாயை அழைத்துக்கொண்டு மாளிகைக்கு வந்துசேர்ந்தான். மீனாக்ஷியம்மாளைக் கண்ட காமாக்ஷி தாயைக் கண்ட குழந்தையைப்போல் ஆனந்தங்கொண்டு அவளுக்கு வெகு மரியாதையாக உபசாரம் செய்தாள். பிரபு வைத்தினாதன் கையைப் பிடித்துக்கொண்டு அவனுக்குத் தக்க மரியாதை செய்ததோடு பத்தாயிர ரூபாய் இனாமாகக் கொடுத்து

"வைத்திநாதா! நீ செய்த உபகாரத்திற்கு நான் செய்தது போதாது. உனக்கு ஈசுவரன் அருள்புரிவாராக." என்று ஆசிர்வதித்தார். அதற்கு வைத்தினாதன் பிரபுவை வணங்கி "பிரபோ! நான் மனிதருள் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்தேன். நான் ஒன்றும் ஜாஸ்தியாகச் செய்துவிடவில்லை. மேலும் என் எஜமானர் திருவேங்கடம் இது விஷயமாய் என்னைக் கம்பெனியில் வேலையில் உயர்த்தியதுமல்லாமல் என் சம்பளத்தையும் உயர்த்திவிட்டார். அவர் என்னிடம் காட்டிய கருணைக்கு நான் என் சரீரத்தையே அர்ப்பணம் செய்கிறேன்." என்று தன் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தினான்.

இச் சம்பவங்கள் நடந்த ஒரு வாரத்திற்கெல்லாம் திருவேங்கடத்திற்கும் காமாக்ஷிக்கும், பாலகிருஷ்ணனுக்கும் பத்மாக்ஷிக்கும் மாளிகையில் வெகு விமரிசையாகக் கல்யாணங்கள் நடைபெற்றன. அக் கல்யாணங்களை பத்மநாபனே கூடவிருந்து நடத்திவைத்தான். பிரபு தம்பதிகளை ஆசிர்வதித்தார். அக் கல்யாணத்திற்கு வந்திருந்த விருந்தினர்கள் பத்மநாபனைக் கொண்டாடினார்கள். காமாக்ஷிப் பெருமாட்டியின் பிரயத்தினத்தின்பேரில் விஜயாளுக்கும் வைத்தினாதனுக்கும் கல்யாணமாயிற்று. பத்மநாபன் தான் கல்யாணம் செய்துகொள்ளவில்லையெனத் தீர்மானித்து அம் மாளிகையின் சமீபத்திலுள்ள ஓர் பெரிய பங்களாவை விலைக்கு வாங்கி அதில் பாலகிருஷ்ணன் பத்மாக்ஷி இவர்களுடன் வசிக்கலானான். காமாக்ஷி தன் தகப்பனாருக்குச் சொல்லியமாதிரி அவரைவிட்டுப் பிரியாமல் மாளிகையிலேயே தன் கணவனுடன் வசிக்கலானாள்.

சோமநாதன் கேஸ் விசாரணைக்கு வர, பத்மநாபன் அவன் விஷயத்தில் இறக்கங்கொண்டு அவன் விடுதலையடையும்படியான ஏற்பாடுசெய்து அவனைக் காப்பாற்றினான். அவன் பத்மநாபனால் கொடுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு பினாங்கு சென்று தன் கெட்டநடவடிக்கைகளை விட்டுவிட்டு ஓர் பெரிய வியாபாரியாய் வசித்துவருகிறான்.



வீரபத்திரன் பம்பாயில் கைதுசெய்யப்பட்டு அங்கு அவன் செய்திருந்த குற்றத்திற்காக பத்து வருஷம் கடுங்காவல் தண்டனை யடைந்தான். ஆனால் கொஞ்சநாளில் ஜெயிலிலேயே மரணமடைந்தான். பத்மநாபன் அடிக்கடி வெளிநாடுகளில் சஞ்சாரம்செய்துகொண்டு பாக்கி காலத்தை பாலகிருஷ்ணன் திருவேங்கடம் இவர்களுடன் சந்தோஷமாய் அவர்கள் குழந்தைகளைவைத்து சீராட்டிக் கழிக்கலானான். பிரபுவும் தன் பேரன் பேத்திகளை வைத்துக்கொண்டு வெகுகாலம் சௌக்கியமாய் வசிக்கலானார். தம்பதிகள் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் புத்திர பாக்கியம் பெற்று தங்கள் காலத்தை நல்வழியில் கழித்து மிக்கக் களிப்புடன் வசித்துவருகிறார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

ஓம் பரப்பிரும்மணே நம:

# நீலகண்டன்.

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைபுள் நாடு."
"திருவின் செல்வி மருவிடும் மார்பன்
மருமலர்ப் பாதம் வணங்கி வாழ்த்துதுமே."

## அத்தியாயம் 1.

"ஐயோ! அண்ணா! இக் கஷ்டம் என்னால் பொறுக்க முடியவில்லையே. நான் என்னசெய்வேன்?" என்று அழுது கொண்டே அலங்கோலமாய்த் தன் தங்கை மங்களம் உள்ளேவரவே, மிகவும் ஊக்கத்துடன் வாசித்துக்கொண்டிருந்த நாகராஜன், தன் கையிலிருந்த புஸ்தகத்தை அப்படியே மேஜைமேல் எறிந்துவிட்டு நாற்காலியிலிருந்து ஒரே தாவலாய்த் தாவி அவளை நோக்கி ஓடியவண்ணம் அன்பொழுகும் குரலில்,

"அம்மா! என்ன இது? நடந்த விஷயம் என்ன?" என்று கேட்க, மங்களம், தன் முதுகைத் தடவிக்கொண்டே,

"அண்ணா! இதற்கு விமோசனமிருப்பதாய்த் தோன்றவில்லையே. ஐயோ! இவர்களிடம் அடி வாங்கி வாங்கி என் சரீரமே புண்ணாய்விட்டதே. ஹே தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா?" என்று நடந்த விஷயத்தைச் சொல்லாமல் தன் சரீரம் குலுங்க மேலும் அழவாரம்பித்தாள்.

நாகராஜன் ஒன்றும் புரியாமல் திகைப்புற்று ஆவலுடனும் பிரியத்துடனும் அவளுடைய கரங்களைப் பற்றிக் கொண்டு "மங்களம்! என்ன நடந்தது? உன்னை இப்பொழுது அடித்தது யார்?" என்று மறுபடியும் வினவ அப்பெண்மணி தன் துக்கத்தின் மிகுதியால் மேலே பேசமுடி

ஆவணக் காப்பக
சென்னை-600 008

யாமல் அப்படியே தரையிலுட்கார்ந்துகொண்டு கரங்களால் தன் முகத்தை மூடிக்கொண்டாள்.

மங்களத்துக்கு சுமார் 18 வயதிருக்கும். ஆனால் அவளுடைய பாழும் நெற்றியையும் இன்னும் சாதாரணமாய் சுமங்கலிகளிடம் காணக்கூடிய ஒரு களையும் குதூகலமும் சிறிதுமின்றி துக்கத்தாலும் கவலையாலும் வெளுத்து வாடியிருந்த அவளுடைய முகத்தைப் பார்த்ததுமே அவள் அச்சிறு வயதிலேயே தன் புருஷனையிழந்து வைதவ்யமடைந்தவளென்பதை எளிதில் கண்டுகொள்ளலாம். அந்தோ! உலகில் பெண்ணாய்ப் பிறப்பதே பாபம். அதுவும் பால்யத்திலேயே தன் கணவனைப் பறிகொடுத்துவிட்டு தன் பிறந்த வீடே கதியென்று விடப்பட்ட ஒரு பேதைப் பெண்ணின் பரிதாபகரமான நிலைமையை நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ?

நிற்க நாம் கதை நடக்குமிடம் சுவர்ணபுரியென்ற ஒரு புண்ணிய க்ஷேத்திரமென்பதையும் அது நடந்த வருஷம் 1909 என்பதையும் இப்பொழுதே சொல்லிவிடுவோம்.

இன்னும் இங்கே மங்களத்தின் குடும்பத்தைப்பற்றிக் கொஞ்சம் விபரமாய்க் கூறவேண்டியது அவசியம். மங்களத்தின் தந்தை ராமு தீக்ஷிதர் இறந்து நாம் சொல்லும் சமயம் கிட்டத்தட்ட 5 வருஷகாலமிருக்கும். அவருக்கு சீதாராமன் நாகராஜன் என்ற இரு புதல்வர்களும் நாம் சொன்ன மங்களம் என்ற ஒரு பெண்ணுமிருந்தனர். அப்புதல்வர்களில் சீதாராமனே மூத்தவன். அவனுக்குத் தற்சமயம் 27 வயதிருக்கும். அவன் அதே ஊரில் நல்ல கௌரவமுள்ள உத்தியோகத்திலிருந்தான். உள்ளதைச் சொல்லுமிடத்து அவன் உதாரகுணமும் தன் பெற்றோர் உடன்பிறப்பு இவர்களிடம் மிகவும் பிரியமுமுள்ளவன். ஆனால் அவனுக்குத் தற்சமயம் அவனுடைய உத்தியோகத்திலிருந்து ரூ 100 வருமானமிருந்தபோதிலும் ராமு தீக்ஷிதர் இறக்கும்பொழுது ரூ. 35 தான் சம்பளம். அச்சமயம் நாகராஜனுக்கு 18 வயதும் மங்களத்துக்கு 1



வயதுமிருக்கும். சீதாராமன் தன் தந்தை இறந்ததும் மிகவும் சிரமப்பட்டு தன் தம்பியை மேலும் படிக்கவைத்ததுமன்றி தன்னால் முடிந்தவரையில் பிரயத்தினப்பட்டு ஒரு நல்ல பையனைப் பார்த்து தன் தங்கை மங்களத்தின் விவாஹத்தையும் செய்துவைத்தான். அவன் அவ்விதம் தன் குடும்பத்தை ப்ரியத்துடனும் கௌரவத்துடனும் வைத்து சம்ரக்ஷித்துவந்ததைக் கண்டு அவ்வூரில் பலர் ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால் அந்தோ! கலியின் கொடுமையை என்னென்று சொல்லுவது.

ஓர் சமயம் மஹா புத்திமான் ஒருவர் பெண்களைப் பற்றி வர்ணிக்குங்கால் அவர்கள் தங்களிடம் மாட்டிக்கொள்ளும் புருஷர்களை தாங்கள் இஷ்டப்படும்பக்ஷத்தில் சுவர்க்கத்திலும் அனுபவிக்கமுடியாத சந்தோஷ சாகரத்தில் மிதக்கும்படி செய்யவோ அல்லது தங்களை விவாஹம் செய்துகொண்ட இரண்டு வருஷகாலத்திற்குள் அதுவரையில் 'பரம யோக்கியன், மஹா தர்மிஷ்டன்' என்று எல்லோராலும் புகழப்பட்டுவந்த அதே புருஷர்களை 'சிச்சி! இவனும் ஒரு மனுஷனா' என்று அனைவரும் தூஷிக்க, நரகவேதனைகளுக்கும் கேடுகெட்ட அவமானத்திற்கும் கஷ்டங்களுக்குமுள்ளாக்கவோ சக்திவாய்ந்தவர்களென்று கூறியிருக்கிறார்.

நிற்க, மங்களம் தன் புருஷனிடம் சென்ற அதே வருஷம் சீதாராமனுடைய மனைவி அம்மணிடம் வந்துசேர்ந்தாள். காமாக்ஷி என்று பெயர்கொண்ட அப் பெண்மணி அவ்வீட்டிற்குள் நுழைந்ததுதான் தாமதம். தன் புருஷனை தன் அழகினாலும் அபிநயத்தாலும் வாக்சாதுர்யத்தாலும் மயக்கி அவனைக் கேவலம் ஒரு பொம்மைபோல் ஆட்டவாரம்பித்தாள். அவள் வந்த மூன்றுமாதகாலத்திற்குள் சீதாராமனுடைய தாயார் அவளுடைய மரியாதையற்ற நடவடிக்கைகளையும் இன்னும் வர்ணிக்க இயலாத பல அக்கிரமங்களையும் கண்டு சகிக்காமல் அச்சமயம் சென்னையில் வக்கீலாயிருந்த தன் தமயனிடம் போய்ச்சேர்ந்தாள். இவ்விதம் மாமியாரைத் துரத்தியதும் காமாக்ஷி நம் நாகராஜனு

க்கு வெடிவைக்கவாரம்பித்தாள். அதன்பலனாய் அச்சமயம் பி. ஏ. பரிக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்த நாகராஜனுடைய படிப்பை நடுவில் நிறுத்த ஏற்பாடாயிற்று. கொடிது! கொடிது! அவன் தன் புருஷனுடன் கூடப்பிறந்தவனென்பதை சிறிதும் உணராமல் காமாக்ஷி சில சமயம் கண்டபடி பேசியதையும் இன்னும் செய்த பல அட்டூழியங்களையும் நாம் எடுத்தெழுதாமலிருப்பதே நலம். ஆகவே நாகராஜன் தன் படிப்பிற்கேற்பட்ட அபாயத்தையறிந்தும் என்ன செய்வதென்று புரியாமல் திகைப்புற்று அவ்விஷயத்தை சென்னையிலுள்ள தன் தயாருக்குத் தெரிவிக்கவே அம்மாது அதைத் தன் தமயனிடம் தெரிவித்தாள். கல்யாணராமய்யர் என்று பெயர்கொண்ட அவனுடைய மாமாவுக்கு ஆதியிலிருந்தே அவனிடம் ஒரு பிரியமும் அவன் கூடிய சீக்கிரம் நல்ல ஸ்திதிக்கு வருவானென்ற நம்பிக்கையும் உண்டாகையால் அவனை வக்கீல் பரிக்ஷைக்கு படிக்கவைக்க ஒப்புக்கொண்டதுமன்றி தன் ஒரே புதல்வியை அவனுக்கு விவாஹமும் செய்துவைத்தார். நாகராஜன் அதே வருஷம் பீ. ஏ. பரிக்ஷையில் தேறவே அவனைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு லா காலேஜ் திறக்கப்பட்டதும் அதில் சேர்த்துவைத்தார்.

இவ்விதம் தன் புருஷனுடைய தாயாரையும் தம்பியையும் தன் வீட்டிலிருந்து துரத்திவிட்டு காமாக்ஷி தன் இஷ்டப்படி தன் தந்தை அத்தை அம்மங்கா முதலிய உறவினர்களைக் கூட்டிவைத்துக்கொண்டு சுமார் இரண்டு மூன்று வருஷகாலம் சந்தோஷமாய்க் காலங்கழித்துவந்தாள். நிற்க, இதற்குள் சீதாராமன் வசித்துவந்த தெருவிலுள்ளவர்களும் இன்னும் அவனையறிந்த எல்லோரும் அவனைப்பற்றி கண்டபடி பேசத் தலைப்பட்டனர். வரவர அவனுடைய ஆப்த சிநேகிதர்களும் அவன் அவ்விதம் தன்னைப் பெற்று வளர்த்த தயாரையும் தன் கூடப்பிறந்த ஸகோதரனையும் தன் மனைவியின்பொருட்டு துரத்திவிட்டு அவளுடைய பந்துஜனங்களுடனிருப்பதைக் கண்டதும் அவனை அடியுடன் வெறுத்து அவன் வீட்டிற்கு வருவதையும் அவனுடன் பேசு



வதையும் நிறுத்தவாரம்பித்தார்கள். ஆகவே கொஞ்சம் கொஞ்சமாய் சீதாராமன் தான் செய்த பிசகையுணரலுற்றான். நடுவில் சில சமயம் அவன் மறுநாட்காலை தானே சென்னை சென்று தன் தாயாரைத் தன்னுடன் அழைத்து வந்துவிடுவதென்று நிச்சயித்ததுமுண்டு. ஆனால் அந்தோ! அதே இரவு தன் மனைவி காமாக்ஷி கையில் பாலுடன் தன் படுக்கை அறைக்குள் நுழைந்து அவளுடைய மாயவலையை வீசவே அவ்வெண்ணம் பறந்துவிடும்.

வரவர காமாக்ஷி செய்துவந்த அக்கிரமங்களைக் கண்டு தெய்வமே சம்மதிக்கவில்லைபோலும். ஆனால் காமாக்ஷியைத் தண்டிக்கும்பொருட்டு அப் பாழும் தெய்வம் மற்றொரு பெண்மணியை அநியாயமாய்ப் படுகுழியில் தள்ளி அக் கஷ்டத்திலிருந்து மீள வகையின்றி துக்கசாகரத்திலாழ்த்தியதை நினைக்க நம் உடல் பதறுகிறது. அப்படி நடந்த விஷயம் இதுவே. தன புருஷனிடம் சென்ற மங்களம் இரண்டு வருஷகாலம் மிகவும் சந்தோஷமாயிருந்ததுமன்றி ஒரு ஆண் குழந்தைக்கும் தாயாரானாள். ஆனால் அக் குழந்தையை யீன்ற மூன்று மாதகாலத்திற்குள் அவள் தன் கணவனை இழந்து தன் தமயன்மார்களை கதியென்று விடப்பட்டாள். ஆனால் தன் ஒரே தங்கை இவ்விதம் வைதவ்யமடைந்ததைக் கண்டதும் சீதாராமன் நியாயத்திற்கும் அந்நியாயத்திற்குமிடையில் தொங்கிக்கொண்டிருந்த தன் மனைவியின் மாயவலையைத் திடீரென்று ஆவேசங்கொண்டவன்போல் சின்னபின்னமாய்க் கிழித்தெறிந்துவிட்டு தன் தங்கையைக் காப்பாற்ற முன்சென்றான். மங்களத்தின் புருஷன் இறந்துவிட்டானென்ற தந்தியை சீதாராமன் வாசித்த ஒருமணி நேரத்திற்குள் காமாக்ஷியின் தந்தை அத்தை அம்மங்கா முதலியர்கள் அவ் வீட்டிலிருந்து துரத்தப்பட்டனர். ஆகவே மங்களம் தற்சமயம் மறுபடியும் தன் தமயனிடம் வந்து கிட்டத்தட்ட இரண்டு வருஷகாலமிருக்கும். முதலில் சீதாராமன் அவள் தன் துக்கத்தைச் சிறிதும் உணர வகையின்றி அவளை வைத்து மிகவும் பிரியத்துடன் ரக்ஷித்துவந்தானென்பதை நாம் ஒப்

புக்கொள்ளவேண்டும். மங்களம் அங்கு வந்ததும் சென்னையிலிருந்து அவளுடைய தாயாரும் வந்துசேர்ந்தாள்.

இவ்விதம் தன் புருஷனுடைய ஜனங்கள் மறுபடியும் அவளைச் சூழ்ந்துகொண்டதும் நம் காமாக்ஷிக்குண்டான கோபத்திற்கு அளவேயில்லை. அவளுக்கு உடனே மங்களத்தின்மீதுண்டான பொறாமையும் துவேஷமும் அளவற்றது. எனவே எப்படியாவது அவளை அவ் வீட்டிலிருந்து அடித்துத் துரத்தாமலிருப்பதில்லையென்று சபதம் செய்துகொண்டாள். ஆனால் அக் காரியத்தைத் தானே தனிமையில் செய்வது முடியாத காரியமென்று நினைத்து தனக்கு சாதகமாகத் தன் கக்ஷியில் இன்னும் சிலரையும் சேர்த்துக்கொண்டாள். அப்படி அவளுடன் சேர்த்துக்கொண்டவர்களில் மங்களத்தின் தாயாரே ஒருவளென்பதையறிய நம் நேயர்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் இக் கலியுகத்தில் நடக்கும் சில நம்பத்தகாத அநியாயங்களைத் தங்களுடைய அநுபவத்தில் பார்த்த பலர் இது சாத்தியமென்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். காமாக்ஷி இனி தான் தன் மாமியாரை விரோதித்துக்கொள்ளுவது பிசகென்றுணர்ந்து அவளிடம் மிகவும் மரியாதையும் பார்ப்போர் மயங்கத்தக்க பிரியமும் காட்டவாரம்பிக்கவே அக் கிழவி தன் நாட்டுப்பெண் திருந்திவிட்டாளென்று மனம் பூரித்து கூடியசீக்கிரம் காமாக்ஷியின் வலையில் மாட்டிக்கொண்டாள். தன் முழு சாமர்த்தியத்தையும் தந்திரத்தையும் உபயோகித்து காமாக்ஷி தன் மாமியார் தன் வலையில் நன்றாய் சிக்கிவிட்டாளென்பதை நிச்சயமாயறிந்ததும் மங்களத்தைப்பற்றி இல்லாத கோளெல்லாம் சொல்லி தாயாரையும் பெண்ணையும் மறுபடியும் ஒன்றுசேர வழியின்றி பிரித்துவிட்டாள். ஆகவே மங்களம் தன் தமயனிடம் வந்து 18 மாதகாலத்திற்குள் தனக்கு முதல் சத்துரு தன் தாயாரேயென்பதைக் கண்டதும் அவள் அநுபவித்த கவலையையும் அவளை உயிருடன் வதைத்த துக்கத்தையும் நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளவேண்டும். வரவர காமாக்ஷியைக்காட்டிலும் தன் தாயாரே தன்னை அவ் வீட்டிலிருந்து



துரத்தும் காரியத்தில் சிரத்தையும் ஊக்கமுமுள்ளவளென்பதைக் கண்டாள். பிறகு மாமியும் மருமகளுமாய்ச் சேர்ந்துகொண்டு அவளை வாயில்வந்தபடியெல்லாம் வைது ஹிம்ஸிக்கலாயினர். மங்களத்துக்குக் கையில் 2 வயதுக் குழந்தையிருந்தபோதிலும் அவளே அவ் வீட்டிலுள்ள காரியங்களையெல்லாம் செய்துவந்தாள். சுருக்கிச் சொல்லுமிடத்து அவ் வீட்டில் மங்களத்தின் நிலைமை அடிமைக்கும் கேடுகெட்டதாய்விட்டது. முதலில் அவள் செய்த காரியங்களில் குறை கண்டுபிடித்து அவளுடைய தாயார் அவள் தன் வயிற்றில் பிறந்த குழந்தையென்பதையும் மறந்து திட்டதுடன் நிற்காமல் அடிக்கவும் ஆரம்பித்தாள். இதை சீதாராமன் சிலசமயம் கவனித்துத் தன் தாயாரைக் கண்டித்ததுண்டு. ஆனால் தன் தாயாரும் மனைவியும் ஒன்றுசேர்ந்து மங்களத்தைப்பற்றிப் புகார் சொல்வதைக் கண்டதும் வரவர அவனும் அவர்களை நம்பி மறுபடியும் அக் கக்ஷியில் சேர்ந்துகொண்டான்.

நிற்க, மங்களம் வைதவ்யமடைந்தபொழுது நாகராஜன் சென்னையில் தன் மாமனாரிடமிருந்தான். அச் செய்தியைக் கேட்டதும் அவ் வாலிபன் அடைந்த விசனத்தையும் கவலையையும் வர்ணிப்பது அசாத்தியம். சுமார் 10 தினங்கள் வரையில் ஏதோ திடீரென்று சித்தப்பிரமைகொண்டவன்போலிருந்தான். அவனுக்கு ஆதியிலிருந்தே மங்களத்தினிடம் அளவுகடந்த பிரியமும் இன்னும் தான் சம்பாதிக்கவாரம்பித்ததும் தன்னால் முடிந்தவரையில் தன் பிரியத்தைப் பல விதங்களில் வெளிக்காட்டவேண்டுமென்ற அவாவும் உண்டாகையால் அவ்விதம் தன் அருமைத் தங்கை குறைப்பட்டதைக் கண்டதும் தீயில் விழுந்த புழுவைப்போல் துடித்தான். பிறகு மங்களம் தன் தமயனிடம் வந்துசேர்ந்ததும் மிகவும் பணிவுடன் சீதாராமனுக்குப் பல புத்திமதிகளைச் சொல்லி அவளைப் பிரியத்துடன் காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டான். இன்னும் தானும் அடிக்கடி சுவர்ணபுரி வந்து தன் தங்கையைப் பார்ப்பதும் அவளுக்குப் பல தேறுதல் கூறுவதுமாயிருந்தான். அவ்வி

தும் அவன் ஒருசமயம் சுவர்ணபுரி வந்தபொழுதே நம் கதை ஆரம்பமாகிறது.

நாகராஜன் மிகவும் ஊக்கமும் சாமர்த்தியமுமுள்ளவனாகையால் தான் அங்கு வரும்பொழுதெல்லாம் நன்றாய்க் கவனித்ததிலிருந்து எல்லோருமாய்ச் சேர்ந்து தன் தங்கையைக் கஷ்டப்படுத்துகிறார்களென்பதை அறிந்ததும் அவனுக்குண்டான விசனத்திற்கு அளவில்லை. ஆகவே அவன் "ஹே தெய்வமே! நான் சம்பாதிக்கவாரம்பித்து என் தங்கையை என்னிடம் அழைத்துச் சென்று என் மனம் குளிர அவளை ரக்ஷிக்குங்காலம் எப்பொழுது வருமோ? ஹே அநாதரக்ஷகா! என் பொருட்டில்லாவிட்டாலும் சுவாணங்களுக்கும் கேடுகெட்ட நிலைமையிலிருக்கும் என் தங்கைமீதாகிலும் தயைவைத்து இவ்வருஷம் என் படிப்பு முடிந்து நான் உடனே சம்பாதிக்குமாறு அருள்புரிவாயாக." என்று அவன் தினந்தோறும் பிரார்த்திப்பது வழக்கம். இனி நம் கதையைக் கவனிப்போம்.

நாம் சொன்னவிதம் மங்களம் தன் அறைக்குள் வந்து "ஐயோ! இவர்களிடம் அடி வாங்கி வாங்கி என் சரீரமே புண்ணாய்விட்டதே." என்று கதறிவிட்டு தரையிலுட்கார்ந்துகொண்டு தன் முகத்தை மூடிக்கொண்டு அழவே நாகராஜனுடைய கண்களில் நீர் ததும்பியது. கொஞ்சநேரம் ரிஷிராபத்தினால் திடீரென்று கல்லாய் மாற்றப்பட்டவன்போல் அசைவின்றி பேசவும் சக்தியற்று சிலைபோல் நின்றான். பிறகு ஓடி அவளுடைய பக்கத்தில் மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு அவளுடைய கரங்களை அவைகள் மூடிக்கொண்டிருந்த முகத்திலிருந்து எடுத்துவிட்டு அனுதாபமொழுகும் குரலில்,

"அம்மா மங்களம்! விஷயமென்ன? உடனே சொல்." என்று மறுபடியும் மன்றாடவே மங்களம், தன் துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு தடுமாற்றத்துடன்,

"அண்ணா! என் குழந்தைக்கு மூன்று நாட்களாய் ரொம்ப ஜலதோஷமாயிருப்பதால் மத்தியானம் அவனுக்கு



சாதமூட்டும்பொருட்டு தனியாய்க் கொஞ்சம் ரஸம் எடுத்து வைத்திருந்தேன். சற்று நேரத்திற்குமுன் நான் அதை விட்டுப் பிசைந்து குழந்தைக்கு சாதமூட்டவாரம்பித்ததும் மன்னி (காமாக்ஷி) அங்கு வந்து, அந்த ரஸமன்னம் தன் குழந்தைக்கு வேண்டுமென்று சொல்லவே, நான் என் குழந்தைக்கு ஜலதோஷமாயிருப்பதால் மோரன்னம் போடுவது பிசகென்று சொன்னேன். உடனே மன்னி "மோரன்னம் சாப்பிடுவதால் உன் குழந்தை இறந்துவிடாது. அப்படியே இறந்தாலும் பாதகமில்லை." என்று சொல்லிக்கொண்டே, என் குழந்தை சாப்பிட்டுக்கொண்டிருந்த சாதத்தை வெடுக்கென்று பிடுங்கி, தன் குழந்தைக்கு ஊட்டவாரம்பித்தாள். நானும் முதலில் போனால்போகிறதென்று சும்மாயிருந்துவிட்டேன். ஆனால், குழந்தை தான் சாப்பிட்டுக்கொண்டிருந்த சாதத்தை அவ்விதம் மன்னி பிடுங்கிக்கொள்ளவே அழவாரம்பித்தது. அண்ணா! மகாபாவியாகிய என் வயிற்றில் பிறந்து, அக்குழந்தை சாப்பிடவும் வழியில்லாமல் அழுவதைக் கண்டதும் துக்கம் தாங்கமுடியாமல் நானும் அழவாரம்பித்தேன். உடனே மன்னி "ஏண்டி! மூதேவி! அழுது அழுது என் வீட்டைப் பாழாக்குகிறாய்? இந்தா; உன் சோத்தைத் தொலைத்துக்கொள்." என்று கூறியவண்ணம், சாதமிருந்த அக்கிண்ணியைக் கோபத்துடன் என் முகத்திலெறிந்தாள். இதோ பார் காயம். அதேசமயம் அம்மாவும் அங்கு வந்துசேர்ந்தாள். அவளும் "ஏண்டி உனக்கென்ன வந்துவிட்டது கேடு?" என்று கேட்டுக்கொண்டே, நடந்த விஷயத்தையும் தெரிந்துகொள்ளாமல், என்னை வாயில் வந்தபடியெல்லாம் திட்டவாரம்பித்தாள். மன்னி கிண்ணியை சாதத்துடன் என் மீதெறிந்ததால் அறைமுழுமையும் சாதம் இறைந்து கிடந்தது. உடனே மன்னி "அம்மா! இவள் தன் குழந்தைக்கு சாதமூட்டிக்கொண்டிருந்தாள். நான் என் குழந்தைக்கும் கொஞ்சம் சாதம் போடென்று சொன்னேன். இதற்காக இவள் கோபித்துக்கொண்டு 'என் குழந்தைக்கு சாதம் போட்டால் உடனே உன் குழந்தைக்கும் போடவேண்

டுமோ? இதோ என் குழந்தைக்கு சாதம் வேண்டாம்.' என்று சொல்லிக்கொண்டே வெள்ளிக்கிழமையும் அதுவுமாக இப்படி சாதத்தை வாரி இறைத்துவிட்டாள். இந்த அநியாயம் எங்கு அடுக்கும்?" என்று ஓரேடியாய்ப் புளுகவே, அம்மாவும் அவளை நம்பி, என்னைப்பார்த்து, "ஏண்டி! கெதிகெட்ட நாயே! உனக்கென்னடி அவ்வளவு குரோதம்? நீ உன் புருஷனை உருட்டியதுபோல் இவ் வீட்டிலிருப்பவர்களையும் உருட்டிவிட நினைக்கிறாயோ? துடைகாலி முண்டை!" என்று வைதுகொண்டே ஓடிவந்து என் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு முதுகில் பளீர் பளீரென்று பத்துப் பதினைந்து அறை வைத்தாள். ஐயோ! அண்ணா! பிறர் வீட்டிலிருந்து வந்த மன்னி என்மீது பொறாமைகொண்டு என்னை ஹிம்ஸிப்பதாவது நியாயம். என்னைப் பெற்று வளர்த்த என் தாயே என்னை இப்படி வெறுத்து அவமானப்படுத்தினால் நான் என்ன செய்வேன்?" என்று மறுபடியும் ஓவென்று அழவாரம்பித்தாள்.

அச்சமயம் "அம்மா! அம்மா!" என்று அழுதுகொண்டே சுவர்ணவிக்கிரஹம் போன்ற ஒரு ஆண் குழந்தை அவளிடம் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொள்ளவே, மங்களம், "ஹா! என் செல்வமே! இவ்விதம் உன்னை நான் எவ்வளவுகாலமடா வளர்க்கமுடியும்? அப்பா! மகா பாபியாகிய என் வயிற்றில்தானா நீ வந்து பிறக்கவேண்டும்?" என்று புலம்பியவண்ணம், அக் குழந்தையை வாரியெடுத்துக்கொண்டு, மேலும் தேம்பித்தேம்பியழுதாள்.

இக் காட்சியைக் கண்டதும் நாகராஜனுடைய கண்களிலிருந்து நீர் பிரவாகமாய் வெளிக்கிளம்பியது. பிறகு, கொஞ்சநேரம் தன் தங்கையின் முகத்தை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். உடனே தானும் விசித்து விசித்தழலானான். கடைசியில், மங்களத்தின் முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு,

"அம்மா! இக் கஷ்டத்தில் தெய்வம் உன்னை மேலும் வெகுகாலம் வைக்கமாட்டார். இதுவரையில் பொறுத்து



வந்த நீ இன்னும் கொஞ்சகாலம் பொறுத்துக்கொள். கூடிய சீக்கிரம் உன்னை என்னிடம் அழைத்துக்கொண்டுவிடுகிறேன்," என்று கூறவே, மங்களம் கொஞ்சம் தேறுதலடைந்தவளாய், தன் அழுகையை நிறுத்திவிட்டு, தன் குழந்தையை சமாதானப்படுத்தினாள்.

பிறகு நாகராஜன், உள்ளே சென்று கீழே இறைந்து கிடந்த சாதத்தைப் பொறுக்கிக்கொண்டிருந்த தன் தாயாரைப் பார்த்து,

"அம்மா! நீங்கள் செய்வது கொஞ்சமும் நன்றாயில்லை." என்று கூறவே அக் கிழவி, கடுங்கோபங்கொண்டு,

"ஓஹோ! அப்படியா? உன் தங்கை வெள்ளிக்கிழமையும் அதுவுமாக இப்படி சோத்தை உள் முழுமையும் வாரியிறைத்தது சரி. நான் அவளைக் கண்டித்தது பிசகோ? ஆமாம்; என் பெண்ணைக் கண்டிக்க எனக்கதிகாரமுண்டோ? அடே! இங்கே பார். உனக்குத் தங்கை அவ்வளவு அருமையாயிருந்தால், இதே நிமிஷம் நீ அவளை அழைத்துக்கொண்டு போகலாம். அவள் இவ் வீட்டிலிருக்கவேண்டுமானால் நாங்கள் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டு, எங்களுக்குக் கீழ்ப்படிந்துதான் நடக்கவேண்டும்." என்றாள்.

தன் தாயார் இவ்விதம் பேசுவதைக் கேட்டதும் நாகராஜன், தன் ஆத்திரத்தை யடக்கமுடியாமல்,

"அம்மா! இப்பொழுது நான் அவளை யழைத்துப்போக சக்தியற்றவனாயிருக்கிறேனென்பதை யறிந்து நீ இவ்விதம் பேசுகிறாய். நான் அப்படி அவளை யழைத்துப்போக வழியிருக்குமானால், அனாவசியமாய் இங்கு அவளை ஒரு விநாடிநேரமும் வைக்கமாட்டேனென்பது நிச்சயம். இன்னும் உன் பெண்ணைக் கண்டிக்க உனக்கு அதிகாரமில்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் அவளைக் கண்டிக்குமுன் வாஸ்தவத்தில் அவள் ஏதேனும் குற்றம் செய்தாளாவென்பதை நீ நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். சரி; இப்பொழுது சாதத்தை இவ்விதம் உள் முழுமையும்

இறைத்தது அவள்தானென்பது உனக்குத் தெரியுமா ?" என்று வினவ, அவனுடைய தாயார்,

"அதில் சந்தேகமென்ன? அவள் அப்படிச் செய்த பொழுது கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தவள் அதோ இருக்கிறாளே." என்று திரும்பி, சமீபத்திலிருந்த தன் நாட்டுப்பெண்ணைப் பார்த்து, "ஏண்டி! காமாக்ஷி! சாதத்தை இப்படி வாரியிறைத்தது யார்?" என்று கேட்கவே, காமாக்ஷி, சிறிதும் தயக்கமின்றி,

"யார் இறைப்பாள் ? என் வீட்டை யழிக்கும்பொருட்டு என்னைப் பிடித்திருக்கும் அந்த சனியன்தான்." என்றாள்.

இதைக் கேட்டதும் நாகராஜனுடைய கண்களில் கோபாக்கினி ஜ்வலித்தது. அவன் அதுவரையில் காமாக்ஷியுடன் பேசியதில்லையாகையால், தன் தாயாரை நோக்கி, கோபத்தில் தன்னைத்தானே மறந்தவனாய்,

"அம்மா! இந்த அக்கிரமம் என்னால் சகிக்கமுடியவில்லை. வாஸ்தவத்தில் இப்படி சாதத்தை இறைத்தது யாரென்பது உடனே வெளியாகவேண்டும். சரி; நீங்களிருவரும் அதைச் செய்தது மங்களமென்று சாதிக்கிறீர்கள். இதோ அவளை அழைத்துவந்து, அவள் அப்படிச் செய்யவில்லையென்று அவளுடைய குழந்தையின் தலையில் அடிக்கச்சொல்லுகிறேன். நீயும் உன நாட்டுப்பெண்ணை அவள் அப்படிச் செய்யவில்லையென்று தன் குழந்தையின் தலையிலடிக்கச் சொல்." என்று கடுமையாய்க் கூறவே, காமாக்ஷி, அவன் புருஷனென்பதையே மறந்தவள்போல், அவனைத் திமிருடன் உற்றுநோக்கியவண்ணம்,

"அம்மா ! இதென்ன அநியாயம்? இப்பொழுது தான் வெள்ளிக்கிழமையும் அதுவுமாக அந்தப் பழிகாரி சோற்றை வாரியிறைத்தாள். இதோ இவரென்னமோ தடபுடலாய் வந்து, என் கண்ணனை குழந்தையின் தலையிலடிக்கச் சொல்லுகிறார். பேஷ்! ரொம்ப நன்றாயிருக்கிறது.



எனக்கு என் குழந்தையின் தலைமேலடிக்கவேண்டியது அனாவசியம். எல்லோரும் கொஞ்சம் மரியாதையுடனிருக்க வேண்டும். என்ன வாய்ப் பதட்டம்? குழந்தையின் தலையிலடிப்பதாமே. இப்படிப் பேசிய நாக்கில் நெருப்பையல்லவோ அள்ளிக்கொட்டவேண்டும்." என்றாள்.

இதைக் கேட்டதும் கோபாவேசத்தினால் நாகராஜனுடைய கால்கள் துடித்தன. ஆனாலும் தான் அவளுடன் பேசுவது பிசகென்று நினைத்துத் தன் தாயை நோக்கி,

"அம்மா! இதற்கெல்லாம் ஆதி காரணம் நீயே. சரி; இவ் வீட்டில் நான் இனி ஒருநிமிஷநேரமுமிருப்பது அவமானத்திற்கிடம். என்ன அநியாயம்?—" என்று அவன் மேலேபேசுமுன், காமாக்ஷி, அவனைத் தடுத்து,

"இரு இரு என்று இங்கு ஒருவரையும் கட்டிவைக்கவில்லை. வா வா என்று வருந்தியழைக்கவுமில்லை. இஷ்டமில்லாதவர்கள் குசாலாய்ப் போகலாம். அனாவசியப் பேச்சு என் வீட்டில் வேண்டாம்." என்றாள்.

ஆனால், நாகராஜன், அவள் பேசியதைச் சிறிதும் கவனிக்காமல்,

"அம்மா! இப்பொழுது மணி 2 இருக்கும். நான் 3 மணி வண்டியில் சென்னை போகிறேன். இதுவரையில் நானே என்னுடைய மாமனார் வீட்டிலிருப்பது பிசகென்று நினைத்தேன். ஆனால் இங்கு நீங்கள் மங்களத்தைப் படுத்தும் பாட்டைக் கண்டு என்னால் சகிக்கமுடியவில்லை. இன்னும் அவர் (கல்யாணராமய்யர்) என் மாமனாரென்பதுடன் கூட, மங்களத்துக்கும் மாமாவாகையால், அவரிடம் இங்கு நடக்கும் அநியாயங்களை எடுத்துச்சொல்லி, இன்னும் 3 நாட்களில் என் தங்கையை அங்கு அழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிடுகிறேன். ஆகவே, அதுவரையில் தயவு செய்து அவளைத் தொந்தரவுசெய்யாமலிருக்கும்படி உன்னை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று கூறிவிட்டு, மடமடவென்று மங்களம் இருந்த அறைக்குச் சென்றான்.

அச்சமயம் மங்களம் சிரமத்தினால் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தாள். உடனே நாகராஜன் தான் கொண்டுவந்த சாமான்களையெல்லாம் சேர்த்து ரயிலுக்குப் புறப்படத் தயாரானான். 'நடுவில் தான் அவ்விதம் தன் தமயனிடம் சொல்லிக்கொள்ளாமல் போவது பிசகென்று நினைத்தான். பிறகு, "இதற்காக நான் தாமதிப்பது பிசகு. ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும்வழியில் அவனுடைய ஆபீஸிருப்பதால், போகும்பொழுது அவனைப் பார்க்கலாம்." என்று தீர்மானித்தான். நிற்க, அவன் பெட்டியை மூடும் சப்தத்தைக் கேட்டதும் மங்களம் தன் தூக்கம் கலைந்து எழுந்துட்கார்ந்துகொண்டாள். தன் தமயன் ரயிலுக்குப் புறப்படத் தயாராயிருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டவளாய்,

"அண்ணா! ஊருக்குப் போகிறாயா என்ன? நேற்று என்னிடம் இன்னும் ஒருவாரம் இங்கிருப்பேனென்று சொன்னாயே?" என்று கேட்க, நாகராஜன் உள்ளே நடந்த விஷயத்தையும் அதன் பலனாய் தான் அவளை சில தினங்களில் தன்னிடமே அழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப் போவதையும் கூறவே, கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்தாள். பிறகு,

"என் தாயார் இங்கிருக்கும்பொழுது, நான் வந்து அங்கிருப்பது சரியல்ல. பிரும்மன் என் தலையில் எழுதிய எழுத்தை யாரால் அழிக்கமுடியும்? நான் கஷ்டப்பட வேண்டுமானால் எங்கு சென்றபோதிலும் அது என்னை விடாது. இன்னும் மாமா என்னிடம் எவ்வளவு பிரியமாயிருந்தபோதிலும் நானங்கிருப்பதில் மாமிக்கு இஷ்டமிருக்குமோ இருக்காதோ தெரியாது. என்னைப் பெற்றுவளர்த்த என் தாயாரே எனக்குச் சத்துருவானதை நினைக்க, பிறர் வீட்டு மனுஷியாகிய மாமியிடம் போக நான் எப்படி மனந்துணியமுடியும்?" என்று கேட்க, நாகராஜன்,

"நீ சொல்வது வாஸ்தவமே! ஆனால் மாமியைப்பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். ஏற்கனவே பலதரம்



மாமா உன்னை அங்கு அழைத்துவரும்படி என்னிடம் சொல்லியிருக்கிறார். அவர் உன்மீது எவ்வளவு பிரியமுள்ளவரென்பது உனக்கே தெரியும். இருந்தபோதிலும் முதலில் அவரிடம் இவ் விஷயங்களை நான் தெரிவித்துவிட்டு, பிறகு உன்னை அங்கு வரவழைத்துக்கொள்ளவேண்டுமென்று நினைத்தே இப்பொழுது உன்னை என்னுடன் அழைத்துப்போகவில்லை. இவ் விஷயங்களை அறிந்ததும் அவர் உன்னை ஒரு நிமிஷநேரமும் இங்கு வைக்கமாட்டாரென்பது நிச்சயம். ஆகவே, நான் மறுபடியும் வந்து உன்னை அழைத்துப்போகும்வரையில், நீ தயவுசெய்து தைர்யத்துடனிருக்கவேண்டும்." என்று சொல்லிவிட்டு, அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, கால்மணி நேரத்தில் அவ் வீட்டிலிருந்து வெளியே சென்றான்.

தன் தமயன் சென்றதும், மங்களம் "சரி; போய்க் காரியங்களைக் கவனிப்போம்." என்று சொல்லிக்கொண்டே எழுந்து சமயலறைக்குச்சென்று வழக்கப்படி தன் காரியங்களைச் செய்யலானாள்.

அன்று மாலை சீதாராமன் தன் ஆபீஸிலிருந்து வீட்டிற்குத் திரும்பிவந்தபொழுது மணி 7க்குமேலிருக்கும். அவன் தினந்தோறும் திரும்பிவந்து தன் துணிமணிகளைக் களைந்துகொண்டிருக்கையில் நம் காமாக்ஷி அவனிடம் வந்து சுமார் கால்மணி நேரம் தன் சிறிப்பினாலும் அபிநயத்தாலும் அவனை மயக்குவது வழக்கம். ஆனால் அன்று வழக்கப்படி காமாக்ஷி தன்னிடம் வராததைக் கண்டதும் சீதாராமன், அன்று வீட்டில் ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டுமென்று நினைத்து, சமயலறைக்குச் சென்றான். அங்கு அவனுடைய தங்கை மங்களம் சமையல் செய்துகொண்டிருந்தாள். சீதாராமன், அவளை நோக்கி,

"ஏண்டி! அம்மாவும் மன்னியுமெங்கே?" என்று கேட்க, அப் பெண்மணி, "அவர்கள் மாடியிலிருக்கிறார்கள்." என்று விடையளித்தாள். சீதாராமன், "அவர்கள் அங்கென்ன செய்கிறார்கள்?" என்று வினவ, மங்களம்,

"கிட்டுக்கு உடம்பு சரியாயில்லை—" என்று அவன் மேலே பேசுமுன், சீதாராமன் கவலையுடன் மாடிக்கு ஓடினான்.

சீதாராமனுக்கும் ஒரு குழந்தையுண்டென்பது நம் நேயர்களறிந்த விஷயம். கிட்டு என்று பெயர்கொண்ட அக் குழந்தைக்கு 4 வயதிருக்கும். அது எல்லா விஷயத்திலும் தன் தாயார் காமாக்ஷியைப்போலிருந்ததுமன்றி அதற்கு ஒரு நூதனமான வியாதியுமுண்டு. அதன் பலனாய் அது திடீரென்று மயக்கத்துடன் தரையில் விழுந்துவிடும். அச்சமயம் அதன் உதடுகள் கறுத்து, முகம் விகாரமடைந்து, பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கும். ஆகவே அது வரும்பொழுதெல்லாம் அக் குழந்தைக்கு ஒரு கண்டமென்றே சொல்லவேண்டும். சீதாராமன் எவ்வளவோ சிரமப்பட்டு அதற்கு வைத்தியம் பார்த்தும் அது நிவர்த்தியாகும் வழியாயில்லை.

சீதாராமன் மாடிக்குச் சென்றபொழுது, தன் குழந்தை அவ் வியாதியின் பலனாய் மயங்கிக்கிடப்பதைக் கண்டதும், அவனுக்குண்டான கவலைக்கும் விசனத்திற்கும் அளவில்லை. தன் குழந்தையின் பக்கத்தில் காமாக்ஷி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருந்தாள். அவள், சீதாராமனைக் கண்டதும்,

"ஐயோ! நான் என்ன செய்வேன்? என் குழந்தை பிழைக்குமோ? பாவி அதன் தலையிலடியென்று சொன்ன ஒருமணிக்குள் என் குழந்தைக்கு வந்துவிட்டதே." என்று தன் முழுசாமர்த்தியத்தையும் வெளிக்காட்டி சாகஸம் செய்யவாரம்பித்தாள்.

"பாவி அதன் தலையிலடி—" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் சீதாராமன் ஒன்றும் புரியாமல் திகைப்புற்று அதென்னவிஷயமென்று வினவினான்.

நிற்க, போகும்வழியில் தன் தமயனைப் பார்க்கலாமென்ற எண்ணத்துடன் சென்ற நாகராஜன், சீதாராமனுடைய ஆபீஸுக்குச் சென்று அரைமணிநேரத்திற்கு



மேல் காத்திருந்தும், அவனைப் பார்க்கமுடியாததால் மேலும் தாமதிக்கும்பக்ஷத்தில் தான் போகவேண்டிய வண்டி கிடைக்காதென்று பயந்து, எல்லாவற்றையும் மறுபடியும் நேரில் காணும்பொழுது தன் தமயனிடம் சொல்லலாமென்ற எண்ணத்துடன் போய்விட்டான். ஆகவே, அன்று மத்தியானம் தன் வீட்டில் நடந்தவிஷயமொன்றும் சீதாராமனுக்குத் தெரியாது. அவன் விஷயமென்ன என்று கேட்டதும், காமாக்ஷியும் அவனுடைய தாயாரும் தங்களுக்குவேண்டியபடி மங்களத்தைப்பற்றியும் நாகராஜனைப்பற்றியும் புகார் சொல்லிமுடித்ததும், சீதாராமன்,

"பேஷ்! அப்படியா? இதற்காக அந்த பிருஹஸ்பதியும் (நாகராஜன்) இந்த முண்டைக்குப் பரிந்துகொண்டு என் குழந்தையின் தலையிலடிக்கச் சொன்னானோ?" என்று கூறிவிட்டு, கொஞ்சநேரம் ரௌத்திராகாரத்துடன் தரையை உற்றுநோக்கியவண்ணம் நின்றான். பிறகு தன் தாயாரைப் பார்த்து,

"சரி, நீ முதலில் பலகாரம் பண்ணிவிட்டுவந்து குழந்தையைப் பார்த்துக்கொள். பிறகு நான் போய்ச் சாப்பிடுகிறேன்." என்று கூறவே, அக் கிழவி எழுந்து கீழே சென்றாள். தன் மாமியார் போனதும், காமாக்ஷி மறுபடியும் மங்களத்தைப்பற்றி கண்டபடி கோள்சொல்ல ஆரம்பித்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம் அதுவரையில் மயக்கத்துடன் கிடந்த அவர்களுடைய குழந்தை, தன் கண்களைத் திறந்துகொண்டு, "பசிக்கிறதே; பசிக்கிறதே." என்று அழவாரம்பித்தது. உடனே சீதாராமன், தன் மனைவியைப் பார்த்து,

"அடியே! போய்க் கொஞ்சம் சாதம் கொண்டுவந்து குழந்தைக்கு ஊட்டு." என்று சொல்லவே, காமாக்ஷி கீழே சென்று 10நிமிஷ நேரத்திற்குள் ஒரு கிண்ணியில் சாதத்துடன் திரும்பிவந்தாள். பிறகு, தன் குழந்தையின் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு ஊட்டவாரம்பித்தாள். ஆனால் அக் குழந்தை, சாதம் தன் நாக்கில் பட்டதும் அதை அப்

படியே தப்பிவிட்டு, "நன்னால்லே; நன்னால்லே." என்று மறுபடியும் அழத்தொடங்கவே, சீதாராமன்,

"ஏண்டி! சாதம் உறைக்கிறதோ என்னமோ?" என்றான். காமாக்ஷி,

"இல்லையே; மூன்று முட்டை நெய் குத்தினேனே. எங்கே பார்ப்போம்." என்று சொல்லிவிட்டு, அந்த சாதத்தில் கொஞ்சம் தன் வாயில் போட்டுக்கொண்டாள். உடனே, "ஹூம்; கஷ்டம்." என்று பெருமூச்செறிந்தாள். இதைக் கண்ட சீதாராமன்,

"ஏண்டி! என்ன?" என்று கேட்க, காமாக்ஷி,

"ரஸத்தில் உப்புப் போடவில்லை. குழந்தை எப்படி சாப்பிடும்?" என்றாள்.

"உப்பில்லாமல் அதென்ன ரஸம்?" என்று சீதாராமன் கேட்க, காமாக்ஷி,

"உங்களுடைய தங்கைதான் சமைத்தாள். அவளை அல்லவோ கேட்கவேண்டும்?" என்றாள்.

சீதாராமன் :—ஏண்டி! அந்தப் பீடை சமைக்கவேண்டாமென்று நான் எவ்வளவுதரம் சொல்லியிருக்கிறேன்?

காமாக்ஷி :—நீங்கள் பேசுவது வேடிக்கையாயிருக்கிறதே. குழந்தைக்கு உடம்பு சரியாயில்லையே யென்று ஒருவேளை சமைக்கச் சொன்னால் இப்படித்தான் செய்கிறதோ? இல்லாவிட்டால் இன்னும் சமைக்க வயதாகவில்லையோ? அதென்ன பேச்சு? செய்யும் கார்யத்தில் கவனமிருந்தாலல்லவோ அது ஒழுங்காயிருக்கும்? அஸ்தமித்தால் அவளுக்கு எவ்வளவோ கார்யம்.

சீதாராமன்:—(வியப்புற்று) நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே.

காமாக்ஷி :—அதற்கு நான் என்ன செய்யலாம்? இன்னும் விளக்கிச் சொல்ல எனக்குத் தெரியாது. எல்லாம்



கிடக்க, எனக்குஏன் வீண் வம்பு? கடைசியில் அண்ணா தம்பி தாயார் தங்கை எல்லோரும் ஒன்று சேர்ந்து விடுவீர்கள். நான் தான் இடிபடவேண்டும்.

சீதாராமன் :—என்னடி? பிரமாதமாய்ப் பேசுகிறாயே. ஆமாம்; அதிருக்கட்டும். அஸ்தமித்தால் அவளுக்கு என்ன வேலை?

காமாக்ஷி :—அதென்னமோ எனக்குத் தெரியாது. அதை நான் சொல்லுவானேன்? ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். உங்களுடைய தங்கை உங்களிடம் நல்லதுக்கு வரவில்லை. அவள் வீட்டில் செய்யும் அக்கிரமங்கள் போராமல், உங்களை வெளியிலும் இழுத்து அவமானப்படுத்தாமலிருக்கமாட்டாள். "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்." என்ற வசனம்போல் ஒரு நாள் தானே மாட்டிக்கொள்ளுகிறாள். அதை நான் சொல்லிவிட்டு ஏன் பொல்லாப்பட்டங்கட்டிக்கொள்ள வேண்டும்?

---

## அத்தியாயம் 2.

---

இதற்கு முந்திய அத்தியாயத்தினிறுதியில் நாம் கூறியதுபோல் காமாக்ஷி கூறவே, சீதாராமன், வியப்பும் திகைப்புமடைந்தவனாய், தன் மனைவியின் கால்களைப் பற்றிக்கொண்டு,

"அடியே! நீ இப்படிப் பேசுவது சரியல்ல. உள்ளதை உடனே சொல்." என்று துரிதப்படுத்தவே, காமாக்ஷி, முகத்தை சுளுக்கிக்கொண்டு,

"எனக்கொன்றும் தெரியாது. வீணாய் என் பிராணனை வாங்காதேயுங்கள். எந்த முண்டை எப்படிப்போனாலென்ன? இதுகளுடைய மத்தியிலிருப்பதே பிசகு." என்று சொல்லிக்கொண்டிருக்கையில், கிழே சென்ற சீதாராமனுடைய தாயார் அங்கு வரவே, அப்பேச்சு அத்து

டன் நிறுத்தப்பட்டது. உடனே சீதாராமனும் காமாக்ஷியும் கீழே சென்றனர்.

வரவர, சீதாராமனுடைய மனதில் பலவித சந்தேகங்கள் தோன்றி அவனை வதைக்கலுற்றன. "சீச்சீ! அப்படி ஒருநாளுமிருக்கமுடியாது. மங்களம் மற்ற விஷயங்களில் எப்படியிருந்தபோதிலும்—" என்று மேலே தன்னுள் சிந்திக்கவும் அஞ்சியவன்போல் நிறுத்திவிட்டான். ஆனாலும் அவனுடைய மனதில் தோன்றிய சந்தேகங்கள் அவன் எவ்வளவோ சிரமப்பட்டும் அவனைவிடாமல் பிடிவாதத்துடன் பற்றிக்கொள்ளவே "இதென்ன கஷ்டம்? எனக்கொன்றும் புரியவில்லையே. ஒருக்கால் காமாக்ஷி சொன்னது வாஸ்தவமாயிருக்குமோ? அல்லது அவள் என்ன சொன்னாளென்பது எனக்கு சரியாய்ப் புரியவில்லையோ? சீச்சீ! இதில் சந்தேகமில்லையே. கைம்பெண் ஒருவளுக்கு அஸ்தமித்ததும் வேறென்ன கார்யமிருக்கக் கூடும்? அப்படியே அது வேறுகார்யமாயிருந்தால் அதனால் எனக்கு அவமானம் எப்படி வரக்கூடும்? ஆகவே, அவள் சோரம்போகிறாளென்பது காமாக்ஷி சொன்ன வார்த்தைகளின் அர்த்தமென்பது நிச்சயம். ஹே! பரமேச்வரா! இது வாஸ்தவமாயிருந்து வெளியாகுமானால் என் வம்சத்தின் பெயரென்னவாகும்? இருக்கட்டும்; நான் இப்பொழுது பதறுவது பிசகு. ஆனால் காமாக்ஷி என் தங்கையைப் பற்றி இவ்விதம் அபாண்டமாய்ப் பேசியிருந்தால்அவளைக் கண்டம் துண்டமாய் வெட்டாமல் விடேன். ஆனால் அவள் சொன்னது வாஸ்தவமாயிருக்கும்பக்ஷத்தில் என் தங்கைக்கும் அதே தண்டனை விதிப்பேனென்பது நிச்சயம்." என்று தீர்மானித்துக்கொண்டான். அவன் தன் மனைவி தங்கை இவ்விருவரையும் சந்தேகித்தது வாஸ்தவமே. ஆனால் அவனுக்கு காமாக்ஷியிடமே நம்பிக்கை அதிகமென்பதையும் நாம் சொல்லவேண்டியதில்லை.

இவ்விதம் சிந்தாசாகரத்திலாழ்ந்தவனாய், கடைசியில் அவன் தன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொ



ண்டு சமையலறைக்குள் நுழைந்தான். அங்கு அடுப்பின் சமீபத்தில் தன் தங்கை நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் அவனுடைய முகம் மறுபடியும் வெறுப்பினாலும் சந்தேகத்தினாலும் மாறியது. அன்று மத்தியானம் அவ் வீட்டில் நடந்த சண்டையில் மங்களமே குற்றவாளியென்று தன் தாயாரும காமாக்ஷியும் சந்தேகமற எடுத்துக்காண்பித்திருந்தாலும், இன்னும் அவள் கற்பையிழந்தவளென்ற சந்தேகம் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டதாலும், அவன் மங்களத்தை நோக்கி "சீச்சீ மூதேவி! என் கண்ணெதிரில் நிற்காதே." என்று சீறிவிழவே, மங்களம் வாயைத் திறக்காமல் சமீபத்தில் விளையாடிக்கொண்டிருந்த தன் குழந்தையை எடுத்துக்கொண்டு அவ்வறையைவிட்டு வெளியே சென்றாள்.

அவள் சென்றதும் சீதாராமன் மறுபடியும் அவளைப் பற்றி தன் மனைவியுடன் பேசவாரம்பித்தான். ஆனால் காமாக்ஷி அதைப்பற்றி பேச கண்டிப்பாய் மறுத்துவிட்டாள். ஆகவே அவன் "சரி; படுக்கை அறையில் பார்த்துக்கொள்ளுவோம்." என்று தீர்மானித்து சும்மாயிருந்துவிட்டான்.

நிற்க, தன் குழந்தையை எடுத்துக்கொண்டு வெளியே சென்ற மங்களம் தான் தினந்தோறும் படுத்துக்கொள்ளும் அறைக்குச் சென்று விசனமே வடிவுபோலுட்கார்ந்துகொண்டாள். அச்சமயமிருந்த அவளுடைய மனோநிலைமையை வர்ணிப்பது அசாத்தியம். கீழே ஒரு துணியைப் போட்டு, அதில் அக் குழந்தையைப் படுக்கவைத்துவிட்டு சந்திர பிம்பம் போன்ற அதன் முகத்தைக் கொஞ்சநேரம் உற்றுநோக்கியவண்ணமிருந்தாள். அக் குழந்தையின் முகத்தில் காணப்பட்ட தேஜஸும் அழகும் வியக்கத்தக்கதாயிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க மங்களத்தின் நேத்திரங்களிலிருந்து நீர் தாரைதாரையாய்க் கொட்டவாரம்பித்தது. "ஹே! தெய்வமே! இவ் வயதில் இவ்விதம் புருஷனை யிழந்து, என் பந்து ஜனங்களாலேயே வெறுக்கப்பட்டு, என் குழந்தையையும் சரிவர வளர்க்க வழியின்றி, கஷ்

ட்டப்பட நான் பூர்வ ஜன்மத்தில் என்ன பாபம் செய்தேனோ? அஹா! என்ன ஆச்சர்யம்? உலகத்தில் தாயார்களுக்கு பிள்ளைகளைக்காட்டிலும் பெண்களிடமே ப்ரியமதிகமென்று சொல்லுவார்கள். அப்படியிருக்க நான் மட்டும் இத் தாயார் விஷயத்திலும் இவ்வளவு துர் அதிர்ஷ்டசாலியாயிருப்பது எவ்வளவு வருந்தத்தக்கது? தற்கொலை செய்துகொள்ளுவதற்கும் இப் பாழும் மனம் துணியவில்லையே.—" என்று அவள் தன்னுள் புலம்பிக்கொண்டிருக்கையில், காமாக்ஷி ஒரு பாத்திரத்தில் ஜவ்வரிசிக் கஞ்சியைக் கொண்டுவந்து அவள் எதிரில் வைத்தாள்.

மங்களம் அவ்விதம் வைதவ்யமடைந்தது முதற்கொண்டு பிறர் எவ்வளவோ வற்புறுத்தியும் இரவில் சாப்பிடுவது வழக்கமில்லை. அப்படியே எப்பொழுதாவது இரவில் பசி அதிகமாயிருக்கும்பக்ஷத்தில், அவள் தன் குழந்தையின்பொருட்டு வைக்கும் கஞ்சியிலேயே சிறிதளவு குடிப்பது வழக்கம். நாம் சொல்லும் இரவு அவள் தன் துக்கத்தின் மிகுதியால் அக் கஞ்சியும் குடிக்க மனமில்லாமல் தன் குழந்தைக்குமட்டும் கொஞ்சம் தயார்செய்து அதை அதற்குக் கொடுத்துவிட்டாள். ஆகவே காமாக்ஷி மறுபடியும் தன் எதிரில் அவ்விதம் கஞ்சியைக் கொண்டுவைத்தது அவளுக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. ஏனென்றால் காமாக்ஷி அவள்பொருட்டாவது அவள் குழந்தையின்பொருட்டாவது அவ்வளவுதூரம் அது வரையில் சிரமமெடுத்துக்கொள்ளும் வழக்கமில்லை. மங்களம் மரியாதையுடன் "மன்னி! என் குழந்தைக்கு நான் கஞ்சி கொடுத்தாய்விட்டதே." என்று சொல்லவே, காமாக்ஷி "உன் குழந்தை குடித்தாய்விட்டதென்பது எனக்குத் தெரியும். இப்பொழுது உனக்காகக் கொண்டுவந்திருக்கிறேன்." என்று மிகவும் இறுமாப்புடன் விடையளித்தாள்.

மங்களம் :—எனக்கு இன்று பசியில்லை.

காமாக்ஷி :—நீ உன் இஷ்டப்படி செய். குடி குடியென்று உன் காலைப்பிடிக்க என்னால் முடியாது. உன் அண்ணா



நீ இதுவரையில் கஞ்சி குடிக்கவில்லை என்பதை அறிந்ததும், என்னை உடனே இதைத் தயார்செய்து உன்னிடம் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னார். பிறகு உன் பாடு உன் அண்ணா பாடு.

அச்சமயம் அங்கு வந்துசேர்ந்த சீதாராமன், அவர்களுடைய தர்க்கத்தைக் கேட்டு, "என்னடி அங்கே?" என்று கேட்க, காமாக்ஷி,

"இதோ பாருங்கள்; வைத்த கஞ்சியை இவள் வேண்டாமென்று சொல்லுகிறாள்." என்று விடையளிக்கவே, சீதாராமன்,

"வேண்டாமென்றால் உனக்கென்ன நஷ்டம்? அவளைக் கேட்காமல் நீ ஏன் கஞ்சி வைத்தாய்?" என்று வினவினான்.

இதிலிருந்து கஞ்சி தயார்செய்யச் சொன்னது சீதாராமனல்லவென்பதும் அது காமாக்ஷி தானாகவே செய்த காரியமென்பதும் வெளியாயிற்று. ஆனாலும் சீதாராமன், தன் தங்கையை நோக்கி,

"சரி; சரி. அதை எடுத்துக் குடி." என்று அதட்டவே, மங்களம் தன் தமயன் சொல்லும்பொழுது தான் மறுப்பது பிசகென்று நினைத்தவள்போல் எதிரிலிருந்த கஞ்சியை எடுத்துக் குடித்தாள்.

சீதாராமன் மேலும் அங்கு தாமதிக்காமல் மாடிக்குச் செல்ல, அங்கு தன் தாயார் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருப்பதைக் கண்டான். அக் கிழவி தினந்தோறும் கீழே மங்களத்துடன் படுத்துக்கொள்ளுவது வழக்கமாகையால், சீதாராமன் அவளை எழுப்பி கீழே போகச்சொல்லுமெண்ணத்துடன் பலதரம் அவளைக் கூப்பிட்டும், அவள் கண்களைத் திறக்காததால், அப்படி அயர்ந்து நித்திரை செய்பவளை எழுப்புவ[illegible]என்று நினைத்தான். ஆனாலும் மங்களம் [illegible] தனிமையில் [illegible]க்கொள்ள வேண்டுமே யென் [illegible] மறுபடியும் [illegible]வியை

எழுப்பியும் அவன் அப்படியும் இப்படியும் புரண்டானே யொழிய எழுந்திருக்கும் வழியாயில்லை. அச்சமயம் காமாக்ஷி அங்கு வரவே, சீதாராமன்,

"ஏண்டி! அம்மா அயர்ந்து தூங்குகிறானே. அவனை எழுப்பிக் கீழே போகச் சொல்" என்றான்.

"அவரை ஏன் எழுப்பவேண்டும்? அவர் இங்கேயே படுத்துக்கொள்ளட்டுமே," என்று காமாக்ஷி சொல்லவே,

"இவன் இங்கே படுத்துக்கொண்டுவிட்டால் கீழே அந்தப் பீடை (மங்களம்) தனியாயல்லவோ படுத்துக் கொள்ளவேண்டும்? அவளும் இங்கே படுத்துக்கொள்ள இடமில்லையே." என்றான் சீதாராமன். உடனே காமாக்ஷி,

"ஒருநாள் அவள் (மங்களம்) தனியாய்ப் படுத்துக் கொண்டாலென்ன? அவளை யார் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள்?" என்று அலக்ஷியமாய்க் கூறினாள்.

அதே சமயம் மங்களம் அங்கு வந்து காமாக்ஷியை நோக்கி "மன்னி! அம்மா கீழே படுத்துக்கொள்ள வரவில்லையோ?" என்று கேட்கவே, காமாக்ஷி விடையளிக்காமல் தன் புருஷனை யுற்றுநோக்கியவண்ணமிருந்தாள். உடனே சீதாராமன் "அவன் இங்கேயே படுத்துக்கொண்டுவிட்டான்." என்றான்.

இதைக் கேட்டதும் மங்களம் பயந்த குரலில் "நான் எங்கே படுத்துக்கொள்ளுவது?" என்று வினவ, சீதாராமன் "நீ வழக்கப்படி கீழே படுத்துக்கொள்." என்றான். மங்களம் கொஞ்சநேரம் மௌனமாயிருந்தாள். பிறகு, "நான் ஒண்டியாய் எப்படி—" என்று மேலே பேசுமுன், சீதாராமன், கோபத்துடன், "ஒண்டி என்னடி ஒண்டி? ரொம்ப பயந்தவளாச்சே. இங்கே ஒரு உள்ளில் எத்தனை பேர் படுக்கமுடியும்?" என்று சீறவே, மங்களம் மேலே பேசப் பயந்தவள்போல் போய்விட்டாள்.

ம[illegible]யும் கீழே போகும் தரு[illegible]ருந்தாள். அ[illegible] சீதாராமன், "ஏண்டி!

188795

# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலி உள்பட ரூபா. 1—8—0

ஸிங்கப்பூர், பினாங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 5. வெளி நாட்டிற்கு ரூ 20

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

“பாலவித்யா” தனி பத்திரிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் வந்திருந்த சஞ்சிகைகளெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாதக் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் விலைக்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நாலு அணா அதிகமாக செலவாகிறது. ஸிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்புவதில்லை. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பியாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:— நமது ஸஞ்சிகைக்கு ஏற்ற கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்புபவர்கள் அவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 10.

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.